# TAMIL RIDDLES

I

CONTENTS

1. Kalaimakaḷ Viḍukatai

T.R. Bālakiruṣṇa mutaliyār (ed.)

2. Veḷināṭṭu Viḍukataigaḷ

Aẓ. Vaḷḷiyappā (ed.)

3. Ciṟuvar aṟivu viruntukku ārāyndu

eḍutta ariya viḍukataigaḷ

K.J. Vedamuttu (ed.)

கலைமகள்

# விடுகதை




கலைமகள் பதிப்பு

கலைமகள்

# நவீன விடுகதை

— * —



பதிப்பாளர்:

T. R பாலகிருஷ்ண முதலியார்

விலை] 1967 [ந. பை 25

கலைமகள் அச்சகம்
காலடிப்பேட்டை
சென்னை-19,

# நவீன விடுகதைகள்

கத்தாழை போலிருக்கும் கருநாகப்பாம்பு வந்தவர்களுக்கெல்லாம் புத்தி சொல்லும் பாம்பு அது என்ன?

நாக்கு

வாரிக் களத்தடிக்கும் வந்த பின்பு கோட்டை புகும் போரிற் சிறந்து பொலிவாகும் அது என்ன?

வைக்கோல்

கண்மூடி கண் திறப்பதற்குள் பிறந்து வளர்ந்து இறந்துவிடுவான் இவன் யார்? மின்னல்

ஆக்கத்திற்கும் பயன்படும் அழிப்பதற்கும் பயன் படும் அது என்ன? தீ

எண்ணெய் திரி இல்லாமல் நீண்ட நேரம் எரிவேன் எங்கு சென்றாலும் என்னை எடுத்துச் செல்வார்கள் நான் யார்? டார்ச் விளக்கு

வெள்ளைக் கன்றுக்குட்டி வாலால் தண்ணீர் குடிக்குது அது என்ன? விளக்கு—திரி

பூ....பூ...புதர் புதருக்குள்ளே கோட்டை கோட்டைக்குள்ளே சுவர் சுவருக்குள் அகழி அது என்ன?

தேங்காய்

உள்ளே இருக்கும் ராணிக்கு வெளியே தொட்டால் குத்தும் காவல்காரர்கள் அவர்கள் யார்?

பலாப்பழம்—தோல்

ஆயிரம் துணி கட்டி யிருப்பான் அவிழ்த்துப் பார்த்தால் ஒன்றும் இல்லை அவன் யார்?

வெங்காயம்

இளமையிலே கறுப்பு முதுமையிலே வெளுப்பு அது என்ன? தலைமுடி

கரடு முரடு கசப்புக்காய் கறிக்கு உதவும் சொறிக்காய் அது என்ன? பாகற்காய்

மெதுவாக தட்டினேன் மின்னினாள் பளிச்சென்று அவள்யார்? மின்சார விளக்கு

தீனிக்குக் குறைவில்லை தீர்த்தம் பட்டால் சாவு அது என்ன? நெருப்பு

ஐந்து பேருக்கு இளையவன் கல்யாணத்துக்கு மூத்தவன் அவன் யார்? சுண்டுவிரல்

தீப்பொறி பறக்குது ஆனால் எரியாது அது என்ன? மின்மினிப் பூச்சி

ஆளையாக ஆக்குவதற்கு ஆயிரம் கட்டு அவசியம் அது என்ன? கூரை வீடு கட்டுதல்

வெட்டு வெட்டு என்பான் வெளியே வரமாட்டான் அவன் யார்? நாக்கு

ஒரு மரத்திலே ஐந்து பூக்கள் அது என்ன? பால்—தயிர்—மோர்—நெய்—வெண்ணெய்

கடலிலே பிறந்து கரையிலே ஒதுங்கி இலையிலே விற்கும் பூ என்ன பூ? சுண்ணாம்பு

மூன்று இறக்கை பறவை அந்தரத்தில் தொங்கும் ஆகாயத்தில் பறக்காது அது என்ன? மின்சார விசிறி

வழியில் செல்பவன் குடையை விரிப்பான் அவன் யார்? புகையிலை

சித்திரையில் சிறுபிள்ளை வைகாசியில் வளரும் பிள்ளை ஆனியில் அழகுப் பிள்ளை ஆடியில் விழும் பிள்ளை அது என்ன? பனம்பழம்

பட்டுமேலே பட்டு உடுத்தி பதினறு பட்டு உடுத்தி அம்மிகிட்டே போன அல்லி அரசி அழுது கொண்டே எழுந்தாளாம் அவள் யார்? வெங்காயம்

சிவப்பு ராஜாவை சுற்றி வெள்ளை சிப்பாய்கள் காவல் அவர்கள் யார்? நாக்கு—பற்கள்

கறுப்பு மனிதன் வர முத்துகள் விழ அது என்ன? கருமேகம், மழை

மலர்கூட்டம் மறைந்து காணுது கண்ணைசிமிட்டுது வேடிக்கை காட்டுது! அது என்ன? நட்சத்திரம்

கட்டப்பனையில் எட்டு முட்டிக் கலயம் அது என்ன? கத்தரிக்காய்

வெள்ளை உடல் அழகி மண்ணிலே புதைந்து கிடக்கிருள் அவள் யார்? முள்ளங்கி

கடல் மேல் பிறந்தவனை கரையினில் எடுத்து வெந்து உலர்த்திக் காயப் போட்டு ஊருக்கு அனுப்புவோம் அவன் யார்? மீன்

வாய் இல்லாத பறவைக்கு வால் மட்டும் நீளம் அது என்ன? பட்டம் (காற்ருடி)

கரிய நிறக் குன்று அசைந்து அசைந்து வருகிறது அது என்ன? யானை

வெளியே வெள்ளி விளக்கு விடியும்வரை எரியும் விளக்கு அது என்ன? நிலவு

வெள்ளைக் கத்தரிக்காய் கள்ளக் கூப்பாடு போடுது அது என்ன? சங்கு

ஆள் இல்லாத வீட்டிலே சம்பளம் இல்லாத வேலைக்காரன் காவல் காக்கிறன் அவன் யார்? பூட்டு

மஞ்சள் நிறமாய் இருக்கும் மணி மணியாய் விளைந்து இருக்கும் உள்ளே வெளுத்து இருக்கும் உண்ண உணவு ஆகும் அது என்ன? நெல்—அரிசி

பக்கத்திலே இருப்பான் பார்க்கமுடியாது அவன் யார்? காது

வட்டமான தோட்டத்தில் கட்டிவைத்த இரண்டு காளை பெரிய காளை பன்னிரண்டு அடி பாய்ந்தால் சிறிய காளை ஓர் அடி பாயும் அது என்ன? கடிகாரம், பெரியமுள்—சிறியமுள்

கோயிலுக்கு போகும் போது கூடச் செல்வான் குடுமிக்காரன் அவன்யார்? தேங்காய்

வேடிக்கை விஷமக்காரன் ஓடித் தாவக் கெட்டிக்காரன் அவன் யார்? குரங்கு

கண்ணாடி ஊர் நடுவே பவள நிற பெண்ணொருத்தி காலையில் சிரித்திடுவாள் இரவில் அழுதிடுவாள் அவள் யார்? செந்தாமரை

வாய்க்காலடி வீட்டுக்காரி வாசனையில் கெட்டிக்காரி வாவென்று அழைத்திடுவாள் கிட்டே போனல் குத்திடுவாள் அவள் யார்? தாழம்பூ

ஊர் அடங்கும் நேரத்திலே உத்தமன் எழுந்து ஊர் எல்லாம் சுற்றுகிறன் அவன் யார்? நிலவு

கிழக்கே பிறந்தவன் மேற்கே இறக்கிறான் அவன் யார்?
சூரியன்

செத்தவன் குரல் ஊரெல்லாம் கேட்கிறது அது யார்?
மத்தளம்

முள்ளு புளையிலே மூன்னூறு தேசம் அது என்ன?
ரேடியோ

வெள்ளி மலைமீது தாவி நீந்தி வந்தாள் கள்ளனோடு கை கலந்து பாடி வந்தாள் அவள் யார்?
ஆறு

ஓடாத தேருக்கு ஒய்யார அலங்காரம் அதுஎன்ன?
கோபுரம்

ஆயிரம்பேர் ஒரே வீடுகட்டி அத்தனை பேரும் அதிலே குடியிருப்பர் அவர்கள் யார்?
தேன், தேன்கூடு

ஊரெங்கும் சுற்றி மூலையில் சேரும் அது என்ன?
செருப்பு

எட்டாத தூரம் ஆனாலும் கிட்டத்திலே இருந்து பேசலாம் அது என்ன?
டெலிபோன்

பச்சை நிற பாப்பாத்திக்கு மஞ்சள் நிறக்குழந்தைகள் அவள் யார்?
பலாப்பழம் பலாச்சுளை

காட்டிலே பிறந்து கல்லிலே தேய்ந்து நெற்றியிலே நின்றேன் நான் யார்?
சந்தனம்

ஏடு இல்லாத நோட்டிலே எழுத்தாணி இல்லாமல் எழுதலாம் எப்போ கேட்டாலும் சொல்லலாம் அது என்ன?
மனதால் நினைத்தல்

திறந்த வெளியில் தினமும் சுற்றுவான் அவன் யார்?
சூரியன்

செக்கச்சிவப்பிகள் நாங்கள் தீப்போல பெண்டுகள் நாங்கள் கட்டிக்கொடுத்தால் போவோம் கல்தடுக்கினால் சாவோம் நாங்கள் யார்? சட்டிபானை

அக்ன்ற தலைக்காரி ஆயிரம்சடை தொங்குது அவள் யார்? ஆலமரம் ஆலவிழுது

மஞ்சள்போல் பூப்பூத்து மாறுபோல் காய்காய்த்து எங்கே போனாலும் என்பேர் கறுப்பி நான் யார்? கடுகு

ஆயிரம் மைலுக்கு அப்பால் தங்கரதம் தானாக தவழுது அது என்ன? நிலவு

வீட்டுக்கு அழகுதரும் வாய்திறந்தால் இன்பம்தரும் அது என்ன? ரேடியோ

பாதாள குகையில் பத்தாயிரம் பேர் வசிக்கிறோம் நாங்கள் யார்? எறும்புகள் —எறும்புப் புற்று

கறுப்பாக இருக்கும் காகமும் அல்ல அழகாய்ப் பாடும் குயிலும் அல்ல தன்னைத்தானே சுற்றும் நாயும் அல்ல பெட்டிக்குள் முடங்கும் பாம்பும் அல்ல அது என்ன? சினிமா இசைத்தட்டு

நோயில்லை மருந்து கொள்வான் வாயில்லை கூச்சல் போடுவான் அவன் யார்? பட்டாசு

செதுக்க முடியாத மரம் நீந்த முடியாத மீன் அது என்ன? வாழைமரம் —கருவாடு

அலையில்லாத கடலில் இலையில்லாத மரம் ஒன்று தலையில் சுழன்று ஆட மலையொன்று மிதக்கும் அது என்ன? மோர்—மத்து—வெண்ணெய்

செக்கச் சிவந்த சின்னம்மா சீமை எங்கும் சுற்றி வருவாள் அவள் யார்? மிளகாய்

குச்சிக் குச்சி ராஜாவுக்கு உச்சியில் ஒரு கிரீடமாம் அவர் யார்?
தீக்குச்சி

கசகசா கத்தரி பூத்து கடலும் மல்லியும் துவையல் லிட்டு ஈர வெங்காயம் பொரியலிட்டு இன்பமான கறி என்ன கறி?
உ ப் பு

ஆசையுடன் காசு கொடுத்து வாங்கி அடிக்கிறோம் உதைக்கிறோம் அது என்ன?
ப ந் து

கட்டையன் குட்டையன் கயிற்றை அவிழ்த்து விட்டால் சுழன்று சுழன்று ஆடுவான் அவன் யார்?
பம்பரம்

வெட்டின இலைக்கு வேர்வை இல்லை வேற்று முகம் காண்பதில்லை பிள்ளையும் மூன்றுக்கு புருசன் முகம் காண்பதில்லை அது என்ன?
வாழை மரம்

நின்றேன் நில வெக்கை நீலி என்று பெயர் எடுத்தேன் வந்தேன் வாவரசு வீட்டுக்கு இருகரமும் காப்பு போட நான் யார்?
உலக்கை

பனைமர உயரத்திலே பட்டுத் துணி பறக்குது அது என்ன?
கொ டி

கள்ளச் சுரங்கத்திலே கறுப்பு முரடன் அவன் யார்?
எ லி

ஊசி நுழைய முடியாத காட்டுக்குள்ளே ஒரு ராஜாவின் பல்லக்கு அது என்ன?
பு கை

கையில்லை காலில்லை கட்டிலிலே படுத்திருப்பான் கையால் தூக்கி நின்றால் கதை சொல்வான் காதருகில் அவன் யார்?
டெலிபோன்

ஓடிவரும் மனிதன் ஒளியில் தெரிவான் இருளில் மறைவான் அவன் யார்? நிழல்

ஊரடங்கிய வேளையில் விழித்திருப்பான் கள்வன் அவன் யார்? இருள்—விளக்கு

பாரில் வந்து சேரும் முன்னே பத்து மாதம் சிறை வாசம் அது என்ன? கர்ப்பம்

வட்ட வட்டச் செடி வாடாத செடி மாலையில்மலரும் மங்கையரைக் கவரும் அது என்ன? முல்லைச் செடி

வேர் இல்லாத மரம் என்னமரம்? தந்திமரம்

பச்சை பவள மாளிகைக்குள் சிவப்பு சித்திர அறையில் கறுப்பு முத்துக்கள் ஆயிரம் அது என்ன? பப்பாளிப் பழம்

சின்னப் பையனுக்கு கால் தெரியவில்லை அவன் யார்? எறும்பு

ஆடி ஆடி அவளைப் பெற்றேன் அவள் கிடக்கிருள் அறையிலே நான் கிடக்கிறேன் வெளியிலே அவன் யார்? நெல், வைக்கோல்

ஏழுவகை விருந்தானலும் இலையை எடுத்துவிட்டே சாப்பிட வேண்டும் அது என்ன? கருவேப்பிலை

ஒரு விட்டுக்குள் ஒரே ஆள் உருவில் மிகச் சிறிய ஆள் அவன் யார்? நத்தை

நூறுபிள்ளைகளை தனியாக சுமந்து கொண்டு இருக்கிருள் அவள் யார்? வாழைக்குலை

வெள்ளை சிமாட்டி தலைமேலே விளக்கு எரியுது அது என்ன? மெழுகுவர்த்தி

உலகமெல்லாம் சுற்றுகிறேன் உருவின்றி சுற்று கிறேன் உறக்கமின்றி சுற்றுகிறேன் நான் யார்? காற்று

ஓடஓட தடம் தெரியும் அது என்ன?

பேனு—எழுத்து

வெளுத்த காக்கா வெள்ளை காக்க வானத்தில் பறக் கிறது அது என்ன? விமானம்

ஊருக்கு மேற்கே கூடு கூடெல்லாம் குஞ்சுகள் குஞ்சுகள் எல்லாம் கறுப்பு அது என்ன? எள்ளு

ஒரு காசுக்கு பொதி வாங்கி இரண்டு வண்டி ஏற்றி மீதியை மடியில் கட்டிக் கொண்டேன் அது என்ன?

மூக்குப் பொடி

ஆள் இல்லாத காட்டிலே அங்கம்மாள் புலம்பு கிருள் அவள் யார்? அவரை நெற்று

என் தம்பியை கிள்ளினுல் அழுது கொண்டே இருப்பான் அவன் யார்? தண்ணீர் குழாய்

ஆயிரம் பேர் காவலிருக்க நல்லதங்காள் ஆட்சி யிலே நாலுபேருக்கு மத்தியிலும் நக்காமல் எடுப்பதில்லை அது என்ன? தேன் எடுத்தல்

நீல நீரை உண்டு நீண்டநேரம் கக்குகிருன் அவன் யார்? பேனு, மை

சின்னக்குளத்திலே சின்ன மீன் முழித்து விழித்து விளையாடுது அது என்ன? கண்

வெளியில் இருக்கும் ராஜாத்தியை வெட்கப்படு வாள் தொட்டால் அவள் யார்?

தொட்டாற் சிணுங்கிசெடி

கும்மென்ற இருட்டிலே கோடி வைரக்கற்கள் அது என்ன? நட்சத்திரம்

நடுத்தெருவிலே நாலு பேர் அறிய கொள்ளையடித்த பின் அந்தா போகிறான் இந்தா போகிறான் என்று சொல்வார்கள் அவன் யார்? கழுகு

நான்கு குதிரைகளின் மேல் ஒரே அரசன் அவன் யார்? பிணம்

ஏரித் தண்ணீரை பாம்பு குடிக்கிறது அது என்ன? எண்ணெய்—திரி

காட்டிலும் மேட்டிலும் பூக்காத பனை என்ன பனை? கற்பனை

அந்தி நேரம் ஆனதும் அவசரமாக வீடு செல்கிறான் அவன் யார்? சூரியன்

ஒருவன் அழ ஊரெல்லாம் ஒழுக அவன் யார்? மழை

கறுப்புச் சட்டைக்காரன் கருக்கும் வெயிலை தடுப்பான் அவன் யார்? குடை

மாசியில் பூவாகி பங்குனியில் காய் காய்க்கும் காய் என்ன காய்? மாங்காய்

சிவப்பு சட்டைக்காரன் கொடுத்ததை தின்று விட்டு நின்ற இடத்தில் நிற்பான் அவன் யார்? தபால் பெட்டி

ஒரே வீட்டுக்குள் ஓராயிரம் பேர் அவர்கள் யார்? தீப்பெட்டி—தீக்குச்சிகள்

ஆகாயம் கறுத்தால் ஆடும் பூ ஆடும் பூவுக்கு ஆயிரம் கண்கள் அது என்ன? மயில்

சாதியிலும் சின்னச் சாதி சண்டைக்கு முன் வந்தேன் கோயிலில் புகுந்தேன் கொண்டையில் பூச்சூடா பாவி யானேன் நான் யார்?

துடப்பம்

ஒட்டை வாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை இவன் யார்?

சீப்பு

விதை இல்லாமல் வளரும் மரம் இரு வர்ணம் காட்டும் மரம் ஆபத்தில் உதவும் மரம் என்ன மரம்?

கை காட்டி மரம்

வீட்டில் குடியிருப்பான் விருந்தாளியும் அல்ல விடிந்ததும் தூங்கிடுவான் கும்பகர்ணனும் அல்ல தொட் டால் கொன்றிடுவான் நெருப்பும் அல்ல அவன் யார்?

மின்சார விளக்கு

பசுமை நிறத் தோப்புக்கு சிகப்பு நிற வாயில் அது என்ன?

கிளி

முற்றத்திலே எரிவது பல விளக்கு அதில் பளிச் சென்று தெரிவது ஒரு விளக்கு அது என்ன?

நட்சத்திரம்—நிலவு

கல் மனது உள்ளவன் கண்ணீர் விட்டான் கண நேரத்தில் மறைந்தான் அவன் யார்?

பனிக்கட்டி

மீன் இரண்டு தப்பி வந்து மங்கை வீட்டுக் கிணற் றிலே மாட்டிக்கிட்டு விழிக்குது அது என்ன?

கண் விழிகள்

கறுத்த மனிதன் பச்சைக் குடை பிடிக்கிறான் அவன் யார்?

பனைமரம்

சின்னச் சின்ன கூட்டுக்குள் சிங்கார பறவை தூங்குது அது என்ன?

குழந்தை—தொட்டில்

கால் இல்லாமல் ஓடுகிறன் வாயில்லாமல்கூவுகிறன் அவன் யார்? ரெயில்

பேரானல் நல்லவன் கடித்தால் பொல்லாதவன் அவன் யார்? நல்ல பாம்பு

சிவப்பு சேலே கட்டும் எங்க அண்ணி போகிற இடம் எல்லாம் பொல்லாப்பு அது என்ன? தேள்

பொய் சொல்லி பிழைப்பான் பொன்னம்பலம் அவன் யார்? வக்கீல்

பச்சைப் பசேரென்று இருக்கும் பந்தி முன்னல் நிற்கும் பசியாறிய உடனே பாதையில் கிடக்கும் அது என்ன? வாழை இலே

வெள்ளே மனிதன் எட்டி எட்டிப் பார்க்கிறன் அவன் யார்? மூக்கு சளி

தோகை மயிலுடையாள் சிவப்புத் தோலுடையாள் தின்பதற்கு ருசி உடையாள் அவள் யார்? கரும்பு

அனேவருக்கும் உத்தமி அழியாத பத்தினி அது என்ன? ரூபாய்

கடித்தாலும் ரத்தமில்லே வெட்டினலும் ரத்தமில்லே அது என்ன? நகம்

உடலெல்லாம் பச்சை உதிர்ந்து பார்த்தால் முத்து அது என்ன? வெண்டைக்காய்

ஆடுவான் ஓடுவான் ஆளேக் கண்டால் சீறி எழுவான் பிடித்து அடைத்தால் பெட்டிக்குள்ளே படுப்பான் அவன் யார்? நல்ல பாம்பு

சொரிச்சி வயிற்றில் சிவத்தப் பிள்ளை அதுக்கு நாள் வருது ஆபத்து வருது அது என்ன? பலாப்பழம்

சிட்டுக்குருவி கூடு கட்டி கூடு குஞ்சு பொறிச்சது அது என்ன? பருத்தி

பருத்த உடல்காரி சிறுத்த கொண்டைக்காரி அவள் யார்? பரங்கிக்காய்

கட்டக் கட்டஉயரும் சொட்டச் சொட்ட நனையும் அது என்ன? சுவர்

திருச்சிராப்பள்ளி நாட்டியக்காரிக்கு இறுக்கினற் போல கொண்டை அவளுக்கும் தயிருக்கும் இழுக்க இழுக்க சண்டை அது என்ன? தயிர் கடைதல்

தோட்டத்து அழகிதொட்டால் கிள்ளுகிருள் அவள் யார்? ரோஜா

அடர்ந்த காட்டுக்குள் ஆயிரம் குஞ்சுகள் அது என்ன? பேன்

விதை விதைத்து குரு முளை கண்டு மன்னனுக்கா மன்னன் தேவிக்கா பரதேசிக்கா, உனக்கா எனக்கா அது என்ன? பருத்தி—உடை

ஆயிரம் பேருக்கு நேரே ஆற்றங்கரை ஓரத்திலே கட்டிப் பிடிக்கிருன் கள்ளப்பயல் கன்னத்தைக் கடிக்கிருன் கன்னியவள் அவர்கள் யார்? சினிமா

உடலெல்லாம் குத்துப்பட்டு ஊரைவிட்டு ஊர் ஓடுவான் அவன் யார்? தபால்

சிலர் அறிய வருவார் பலர் அறிய போவார் அவர் யார்? குழந்தை—பிணம்

அடுப்பிலே எண்ணெயை வைத்து அள்ளிப் போட்டால் அடிபிடி சண்டை—அது என்ன? கடுகு

நின்றவனை வெட்டி வெட்டினவனை கட்டி விலை கூறப் போயிருக்கார் அத்தான் அது என்ன?

விறகு வெட்டுதல்

சமையல் முடியும் வரை செல்லப் பிள்ளை சமையல் முடிந்த பின்னே அனாதைப் பிள்ளை அது என்ன?

கருவேப்பிலை

கற்றவனை காதலித்து காகிதத்தின் மேல் நடமாடி மற்றவரை பார்க்க வைத்து மனதில் உதிப்பதை மாற்றாமல் மறைக்காமல் கூறுவாள் அவள் யார்? பேனா

இடி இடிக்குது மின்னல் மின்னுது மழையை காணோம் அது என்ன? பட்டாசு

நெட்டையன் ஓட ஓட குட்டையன் விடாமல் விரட்டுகிறான் அவன் யார்?

கடிகாரம்—சிறிய முள் பெரிய முள்

அழகான பெட்டியில் ஆயிரம் ஓட்டைகள் அது என்ன? சல்லடை

வரி வரியாய் உயர்ந்திருக்கும் படியும் அல்ல பருவத்தை காட்டும் பெண்ணும் அல்ல மணப்பந்தல் முன் நிற்கும் மாப்பிள்ளையும் அல்ல அது என்ன?

வாழை மரம்

பச்சைப்பாம்பு வயிற்றுக்குள் ஆயிரம் கற்கள் அது என்ன? புடலங்காய்—விதை

கலைமகள் அச்சகம், காலடிப்பேட்டை, சென்னை-19

# சோதிட

# சுந்தரசேகரம்

இந்நூல் முன்னொருகாலத்தில் சகல லோககர்த்தனாகிய சுந்திரசேகரர் ஜனகாதியர்களுக்கு உபதேசித்த அரும் பெரும் நூலாகும் இந்நூலில் சோதிடத்தில் தேர்ந்த பல நிபுணர்களின் அநுபவமான அரிய பெரியவிஷயங்களையும் மற்றும் நவகிரகங்கள் நட்பாட்சி, உச்சம், பகை, நீச்சம் மற்றும் கிரக கோட்பாடுகள் பாவக்கிரக சேஷ்டைகள் கிரகமண்டலம் கிரகத்திக்கு கிரகநோக்கு கிரகங்களின் பிரவேசலக்ஷணம் கிரகவடிவம் கிரகஜாதி கிரகபாஷை விவாகத்தை சேர்ந்த பலபொருத்தங்கள் செவ்வாய்தோஷம் மற்றும் பல நக்ஷத்திரங்களின் தோஷமும் நிவர்த்தியும் அஷ்டவர்கத்தின் அறிகுறி புத்திரோர்பத்தி பிறந்த குழந்தை ஆண் பெண் என்று அறிதல் காலச்சக்கரம் வலவோட்டு இடவோட்டு கிரகத்தின் நன்மை தீமை கோட்களின் பகுதி பாலாரிட்டம் தாய்தந்தைகளின் தத்து கெண்டங்கள் மாரகதிசை மற்றும் பல செய்திகளும் சோதிட வகையின் ஆராச்சிகளை வரையப் பெற்றுள்ளதல்லாமல் பல பிரபல சோதிடர்கள் கையாண்டுவந்த அரிய விஷயங்களையும் சேர்த்து அழகிய தாளில் அச்சிட்டு பைண்டுசெய்து வெளியிட்டுள்ளோம் இந்நூல் சோதிடம் கற்பவருக்கும் மற்றும் பல சோதிடம் கூறுபவர்களுக்கும் இது ஓர் கைகண்ட பொக்கிஷமாகும் சொற்ப காபிகளே உள்ளன.

சுந்தரசேகரம் முதற்பாகம்

ஷை 2-ம் பாகம் தியாகராஜ சேகரம்

ஷை 3-ம் பாகம் தியாகராஜ ஜோதிட ஆனந்தகளிப்பு

3-பாகம் அடங்கியது விலை ரூபா 5-00

தபால் செலவு ரூபா 1-50

---

கிடைக்குமிடம்: T. R. பாலகிருஷ்ண முதலியார்

2 எழுத்துகாரன் தெரு, காலடிபேட்டை சென்னை-19

# விடுகதைகள்




தொகுத்தவர்:
குழந்தைக் கவிஞர்

# வெளிநாட்டு விடுகதைகள்

தொகுத்தவர் :

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

வெளியிட்டோர் :

குழந்தைப் புத்தக நிலையம்
சென்னை-17

விலை ரூ. 1-25

| | | |
|---|---|---|
| Book's Title | : | VELINAATTU VIDUKATHAIKAL<br>Selected and translated from RIDDLES OF MANY LANDS by Carl Withers and Sula Benet by permission of Abelard-Schuman Ltd., New York. |
| Translator & Compiler | : | AL. VALLIAPPA |
| Illustrator | : | Natanam and Ranu |
| Language | : | TAMIL |
| Paper | : | 11·6 Kg. |
| Printing Point | : | 12 Point |
| Size | : | 18·5 × 12·5 c.m. |
| Pages | : | 40 |
| Edition | : | First Edition, 1962<br>Second Edition, 1977 |
| Price | : | Rs. 1-25 |
| Publisher | : | KULANDAI PUTHAKA NILAYAM<br>Madras-17 |
| Sole Distributor | : | PAARI NILAYAM<br>Madras-1 |
| Printer | : | Jeevan Press, Madras-5 |

# எப்படித் தொகுத்தேன் ?

ஒரு நாள் நூல் நிலையத்திலே ஒரு விடுகதைப் புத்தகத்தைப் பார்த்தேன். அது ஓர் ஆங்கிலப் புத்தகம். 'பல நாட்டு விடுகதைகள்' (Riddles of Many Lands) என்று அதற்குப் பெயர். அதை ஆவலாக எடுத்தேன்; புரட்டிப் பார்த்தேன். சுமார் 90 நாடுகளில் வழங்கி வருகின்ற 800 விடுகதைகள் அதில் இருந்தன. உடனே எனக்கு ஒரு யோசனை தோன்றியது.

'நம் வீட்டுக் குழந்தைகள் அடிக்கடி நம்மிடம் விடுகதை போட்டு நம்மை விழிக்க வைக்கிறார்களே, அவர்களைச் சும்மா விடக்கூடாது. அவர்களை மடக்குவதற்கு இது சரியான புத்தகம்' என்று தீர்மானித்தேன். உடனே, நான் அந்தப் புத்தகத்தை நூல் நிலையத்திலிருந்து எடுத்துக் கொண்டு வீடு நோக்கி வந்தேன். வரும்போதே சில விடுகதைகளைத் தமிழ்ப் படுத்திப் பார்த்தேன்.

வீட்டுக்கு வந்ததும், குழந்தைகளைச் சுற்றி உட்கார வைத்துக்கொண்டு, ஒவ்வொரு விடுகதையாகப் போட்டேன். சில விடுகதைகளை அவர்கள் எளிதிலே விடுவித்தார்கள். சில அவ்வளவு சுலபமாயில்லை. சில விடுகதைகளைக் கேட்டதும், "ப்பூ, இதுபோல் நம் நாட்டில்கூட இருக்கிறதே!" என்றார்கள். ஆனாலும், மொத்தத்தில் அந்த விடுகதைகளை அவர்கள் மிகவும் ரசித்தார்கள்.

இப்படிச் சில நாட்கள் தினமும் மாலையில் நான் புதுப் புது விடுகதைகளை அந்தப் புத்தகத்திலிருந்து கூறிவந்தேன். ஆனாலும், அதில் இருந்த 800 விடுகதைகளில் 125 விடுகதைகளைத்தான் நான் தேர்ந்தெடுத்தேன். அவற்றை அப்படியே சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்கவில்லை. கூடுமான வரையில் அந்தக் கருத்தை வைத்துக்கொண்டு நம் தமிழ் நாட்டு விடுகதையைப் போலவே கூற முயன்றேன். நாம் விடுகதைகளைப் பாட்டுப் போலல்லவா கூறிவருகிறோம்? அப்படித்தான் நானும் கூறினேன்.

இந்த விடுகதைகளைக் கேட்டு எங்கள் வீட்டுக் குழந்தைகள் மட்டும்தானா மகிழ்ந்தார்கள்? இல்லை; அவர்களின் நண்பர்களிடத்திலும் இந்த விடுகதைகள் பரவி, அவர்களும் மகிழ்ச்சி அடையத் தொடங்கினார்கள்.

அவர்களெல்லாம் கேட்டு மகிழ்ந்த விடுகதைகளைத் தமிழ் நாட்டுக் குழந்தைகள் அனைவருமே கேட்டும், போட்டும் மகிழ வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அவ்வாறே அந்த 125 விடுகதைகளையும் தந்திருக்கிறேன்.

"125 என்கிறீர்கள். ஆனால் இந்தப் புத்தகத்தில் 155 விடுகதைகள் இருக்கின்றனவே!" என்றுதானே கேட்கிறீர்கள்? ஆம், மீதமுள்ள 30 விடுகதைகளை ஈரான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பர்மா, இலங்கை, மலேயா முதலிய நாடுகளில் உள்ள என் இனிய நண்பர்களுக்கு எழுதி நேராக வரவழைத்தேன்.

திரு. அலி அஸாய் (Ali Assai, Assistant to the Director-General of Publications, Tehran, Iran), திருமதி காதலீனா வெலாஸ்குவிஸ் (Catelina Velasquez-Ty., Curriculam Division, Bureau of Public School, Manila, Philippines), திருமதி மேன்மஸ் ஷவாலி (Madame Maenmas Chavalit, Ministry of Education, Banghok, Thailand), யு ஸோ ஹ்லா (U Soe Hla, Editor, Sarpay Beikman Institute, Rangoon, Burma), டாக்டர் என்.டி. விஜசேகரா (Dr.N.D.Wijesekera, Acting Commissioner, Official Language Department, Colombo, Ceylon), வெ. நா. வெள்ளையன் (V.N.Vellayan, Agent, Indian Bank Ltd., Malacca, Malaya) முதலியவர்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கி அன்போடு விடுகதைகளை அனுப்பி உதவினர். அவர்களுக்கும், 'Riddles of Many Lands' என்ற ஆங்கிலப் புத்தகத்திலிருந்து விடுகதைகளைத் தேர்ந்தெடுத்து வெளியிட எனக்கு அனுமதி தந்த பதிப்பாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

சென்னை—17
20—8—62

அழ. வள்ளியப்பா

# விடுகதை பற்றிய கதைகள்

**மு**ன் காலத்தில் கிரேக்க நாட்டிலும் ரோமாபுரியிலும் பள்ளிக்கூடங்களில் 'விடுகதைப் பாடம்' என்று ஒரு பாடம் இருந்துவந்தது. விடுகதைகளை எப்படி விடுவிப்பது, புதிய புதிய விடுகதைகளை எப்படி இட்டுக் கட்டுவது என்று மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்! ரோமாபுரிப் பள்ளிகளில் 'விடுகதைப் பாடம்' கட்டாயப் பாடமாக இருந்து வந்ததாம்!

கிரேக்க நாட்டில் பெரிய விருந்து என்றால் நிச்சயம் அங்கே விடுகதை இருக்கும்; விருந்து முடிந்ததும், எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்து கொள்வார்கள். ஒரு நிபுணர் விடுகதைகள் போடுவார். மிகமிகச் சிக்கலாக அந்த விடுகதைகள் இருக்கும். யார் அதிகமான விடுகதைகளை விடுவிக்கிறார்களோ, அவர்களுக்கு மாலை போட்டு 'வாழ்க ! வாழ்க !' என்று வாழ்த்துக் கூறுவார்கள்.

• • •

துருக்கியில் சில பழங்குடி மக்கள் இருக்கிருர்கள். அவர்கள் வீட்டுப் பெண்கள் விடுகதை போடுவதில் கெ ட் டி க் கா ரி கள். அவர்கள் வீட்டுக்குப் பெண் பார்க்க ஒரு பையன் வந்தால், அவன், அந் தப் பெண் போடும் விடுகதை களுக்குச் சரியாக விடை கூற வே ண் டு ம். அப்போதுதான், அவனை அவள் மணந்துகொள் வாள். இல்லாவிடில், ஏமாற்றத் துடன் திரும்பிப் போகவேண் டியதுதான்! விடுகதைக்கு விடை சொல் ல த் தெரியாதவர்கள், பிரம்மசாரிகளாகவே காலம் தள்ள வேண்டியதுதாளும்!



அங்கே மற்ருெரு வகை மக்கள் இருக்கிருர்கள். அவர்கள் பயிர்கள் வளரும் காலத்தில் வயல் கரை களில் உட்கார்ந்துகொண்டு விடுகதைகள் போடுவார் களாம். யார் யார் சரியான விடை சொல்லுகிருர்களோ, அவர்களுக்கெல்லாம் நல்ல விளைச்சல் இருக்கும் என்று நம்புகிருர்கள்.

• • •

ஆப்பிரிக்காவில் விடுகதைக்குப் பஞ்சமே இல்லை. அங்கு 'விடுகதை விளையாட்டு' என்று ஒரு விளையாட்டு உண்டு. அந்த விளையாட்டில் சிறுவர்கள் இரு கட்சி களாகப் பிரிந்து கொள்வார்கள். ஒரு கட்சிக்கு ஐந்து ஆறு பேர்கள் இருப்பார்கள். ஒரு கட்சியிலிருந்து ஒருவன் விடுகதை போடுவான். எதிர்க் கட்சிக்காரர்கள் அதை விடுவிக்க வேண்டும். அல்லது பதில்-விடுகதை போடவேண்டும். இப்படியே மணிக்கணக்கில் இந்த விளையாட்டை அவர்கள் நடத்துவார்கள்.

இவர்களைப் போலவே பிஜித் தீவிலும் இளைஞர்கள் கட்சிகளாகப் பிரிந்துகொண்டு விடுகதை போடுவார்கள். வெற்றி பெற்றவர்களுக்குத் தோற்றவர்கள் விருந்து வைக்க வேண்டும்.

ஆப்பிரிக்காவில் மாகுவா என்ற ஓர் இனத்தார் இருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு வழக்கம் உண்டு. ஒரு பையனுக்கு அல்லது ஒரு பெண்ணுக்கு வயது வந்ததும், ஒரு சடங்கு நடத்துவார்கள். அந்தச் சடங்கில், அந்தப் பையனுக்கு அல்லது பெண்ணுக்குச் சில விடுகதைகளைப் போட்டு விடை



கூறப் பழக்குவார்கள். விடுகதைக்குச் சரியான விடை கூறத் தெரிந்துவிட்டால், வாழ்க்கையில் அவர்களுக்குக் கஷ்டமே இராதாம். எதையும் எளிதிலே சமாளித்துக் கொள்வார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள்!

அங்கே இன்னொரு வகைப் பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வழக்குகளில் தீர்ப்புக் கூற விடுகதையைப் பயன்படுத்துகிறார்கள்! ஒருவனைக் கைது செய்து நீதிபதியின் முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். நீதிபதி நடந்தவற்றையெல்லாம் பொறுமையோடு கேட்பார். பிறகு சாட்சிகளை விசாரிக்கமாட்டார். குற்றவாளியாக நிற்பவனிடம் சில கடினமான விடுகதைகளைப் போடுவார். சரியான விடை கூறிவிட்டால், அவன் நிரபராதி!

விடை தெரியாமல் விழித்தால், குற்றவாளி! தண்டனை நிச்சயம் உண்டு.

* * *

ஹாவாய்த் தீவில் வசிக்கும் கூட்டத் தலைவர்களுக்குள் அடிக்கடி போட்டா போட்டி வந்துவிடும்: மல்யுத்தம், குத்துச் சண்டை, ஈட்டி எறிதல் முதலிய பந்தயங்களெல்லாம் நடத்துவார்கள். அந்தப் பந்தயங்களுடன் விடுகதைப் பந்தயமும் வைப்பார்கள். இந்தப் பந்தயங்களில் வெற்றி பெற்றவனுக்குத் தோற்றவன் அடிமையாகி விடுவான்!



# வட அமெரிக்கா

கனடா

1. என்னிடம் ஒரு தாள் உண்டு;
மடிக்க முடியாது.
ஏராளமாய்ப் பணம் உண்டு;
எண்ண முடியாது.
கண்ணைக் கவரும் ஆப்பிள் உண்டு;
கடிக்க முடியாது.
பளபளக்கும் வைரம் உண்டு;
பார்க்க முடியாது.

2. எனக்கு ஐந்து விரல்கள் உண்டு;
ஆனால்
இரத்தமும் சதையும் இம்மியும் இல்லை.

3. மெல்லியதாய் இருக்கும்—தண்ணீர்
மேலேயே மிதக்கும்.
ஆயிரம் பேர் சேர்ந்தாலும்
அதைத் தூக்க முடியாது.

4. உனக்குச் சொந்தமான பொருள்;
ஆனால்,
உன்னைவிட அதிகமாய்
உபயோகிப்பார் மற்றவர்கள்.



ஐக்கிய அமெரிக்கா

5. ஒல்லியாய் இருப்பவராம்;
ஒற்றைக்கண் உடையவராம்;
உடம்பிலே பட்டாலோ
'உஸ்' என்று கத்திடுவாய் !

6. செக்கச் சிவந்திருக்கும்.
வைக்கோல் கொடுத்தால் தின்னும்;
தண்ணீர் கொடுத்தால் சாகும்.

7. முன்னால் போனால்
எவரையும் காட்டும்;
முதுகை உரித்தால்
எதையுமே காட்டாது.

8. விடிந்தவுடனே வேலை செய்வாள்
வேலை இல்லையேல் மூலையில் நிற்பாள்.

9. ஆயிரம் தடவை ஆடினாலும்
அயராத பெண்கள் யார் ?

மெக்ஸிகோ

10. உன்னை வந்து அமுக்கும்;
ஆனால்,
உனக்குத் தெரியாது இருக்கும்.

11. மேல் வீட்டில் மத்தளமாம்;
கீழ்வீட்டில் நாட்டியமாம்.

க்யூபா

12. காட்டிலே பச்சை;
கடையிலே கறுப்பு;
வீட்டிலே சிவப்பு.

13. சின்னப் பையனைப் பிடித்தேன்;
மஞ்சள் சட்டையைக் கிழித்தேன்;
வாய்க்குள் போட்டு அடைத்தேன்;
வயிற்றுக் குள்ளே சேர்த்தேன்.


14. ஆடச் சொல்லிச் சட்டை போடுவார்;
ஆடும் முன்பே கழற்றி விடுவார்.

ஹெய்டி

15. ஒரே குளத்தில் ஒரே மீன்.
வெளியே எட்டிப் பார்த்தாலும்
வேறு குளம் போகாது.

மேற்கு இண்டீஸ்

16. வயிறு புடைக்கத்
தின்ருல்தான்
நிமிர்ந்து நிற்பான்
குண்டப்பன்.



17. இரவு வந்தால்
தோட்டத்தில்
எத்தனையோ பூ பூக்கும்.
பொழுது விடிந்ததுமே
பூவெல்லாம்
மறைந்துவிடும்.

18. அப்பா வீட்டுக் குதிரை
அற்புத மான குதிரை.
காதைப் பிடித்தால்
வாயால் கடிக்கும்!



19 வேகமாய்ப் போகிற
அம்மணிக்கு
விழுந்த கைக்
குட்டையை
எடுக்க நேரமில்லை.

20. கறுப்புக் கோட்டுப்
போட்டிருப்பார்;
கழற்றிக் கீழே
வைக்கமாட்டார்;
விருந்துப் சாப்பாடு
என்றாலோ
விழுந்தடித்து ஓடி
வருவார்.

21. தகப்பனுக்குப் பத்துப் பிள்ளை.
அவர்கள்
தலைக்குப் பின்னே தொப்பி உண்டு.

22. குதிரை தாவத் தாவக்
குறையுது வாலின் நீளம்.

# தென் அமெரிக்கா

## பிரேஸில்

23. மஞ்சள் புடவை கட்டி
வரிசையாய்ப் பத்துப் பெண்கள்
கயிற்றைப் பிடித்துக் கொண்டு
கடையிலே தொங்குகின்றார்.


## அர்ஜெண்டைனு

24. என் பெயரைக் கேட்பவர் அநேகர்.
என்னைப் போட்டு மிதிப்பவரும் அநேகர்.
நான் யார் பெயரையும் கேட்பதுமில்லை;
எவரையும் போட்டு மிதிப்பதும் இல்லை.
—நான் யார் ?

## சிலி

25. பல்லைப் பிடித்து அழுத்திஞல்
பதறிப் பதறி நான் அழுவேன்.

26. கழனியிலே கதிர் விளையும்;
கையால் பறிக்க மாட்டேன்;
கத்தரியால் வெட்டிடுவேன்.



27. முண்டாசு கட்டின சின்னப் பையன்
வீட்டுச் சுவரில் மோதினன்;
வெளிச்சம் போட்டுச் செத்தான்!

பராகுவே

28. பாட்டுப் பாடி வருவார்;
'பட்'டென்று அடித்தால் சாவார்.

பெரு

29. சின்னக் குகைக் குள்ளே
சிவப்புக் கொடி அசையுது.

30. ஆசையுடன் சந்தையிலே
ஐந்துபணம் நான் கொடுத்து,
அழகான ஒரு பெண்ணை
அழைத்துவந்தேன் வீட்டிற்கு.
அழைத்துவந்த பெண் என்னை
அழவைத்து விட்டாளே!



இங்கிலாந்து

31. காலும் இல்லை; கையும் இல்லை;
கண்ணுக் கழகாய் இருப்பவள்;
வெள்ளை உடுப்புப் போட்டவள்;
மெல்ல மெல்லக் குறைபவள்.
சிவப்பு மூக்கு உடையவள்;
சிறிது சிறிதாய்க் குறைபவள்.

32. உள்ளே இருந்தால்
ஓடித் திரிவான்;
வெளியில் வந்தால்
விரைவில் மடிவான்.



வேல்ஸ்

33. கன்னங் கரிய நிறம்
அதுவாம்
கல்வி பரவ உதவுவதாம்.

34. வெள்ளை வெள்ளைச்
சீமாட்டிக்கு
விளக்கு எரியுது தலைக்கு
மேலே.

அயர்லாந்து

35. நிலமோ வெள்ளை;
விதையோ கறுப்பு

36. வெள்ளை வீட்டுக்கு இரண்டு கூரை
கதவும் இல்லை; காவலும் இல்லை.

37. அடிக்க அடிக்க
அழுதான்; அழுதான்.
வழிந்த கண்ணீரால்
வாளி நிறைந்தது.

பிரான்ஸ்

38. வாலைப் பிடித்து இழுக்க இழுக்க
வளர்ந்து கொண்டே போகும்.

39. வெள்ளை வெள்ளைப் பாத்திரம்;
மூடி யில்லாப் பாத்திரம்.

இத்தாலி

40. வெள்ளை வெள்ளை நாற்காலி;
மேலும் கீழும் நாற்காலி;
நடுவே ஆடுவாள் சிங்காரி.

ருமேனியா

41. ஆற்றைக் கடக்கும்;
அக்கரை போகும்;
தண்ணீரைக் கலக்காது;
தானும் நனையாது.

42. எவர்க்கும் தெரியாத பொருள்;
எல்லையெல்லாம் கடக்கும் பொருள்

ஸ்பெயின்



43. ஆயிரம் பேர் அணிவகுப்பர்;
ஆனாலும் தூசி கிளம்பாது.

போர்ச்சுகல்

44. ஒருவன் உருவம் வளர வளர
உன்றன் பார்வை குறையக் குறைய.

45. கூரை வீட்டைப் பிரித்தால்
ஓட்டு வீடு;
ஓட்டு வீட்டைப் பிரித்தால்
வெள்ளை மாளிகை;
வெள்ளை மாளிகைக்கு
உள்ளே குளம்.

46. செத்துப் போன சின்னப்பையன்
ஐந்து பேரைச் சுமக்கிறான்.



47. ஒருவனுக்கு இரண்டு
கண்;
பகலில் பார்க்கும் ஒரு
கண்;
இரவில் பார்க்கும்
இன்னொரு கண்.

பெல்ஜியம்

48. செத்தபின் நடனம்
செய்பவள் யாரோ?

ஹாலந்து

49. சின்னப் பையன் வந்தான்;
திருடன் ஓடிப் போனான்.

ஜெர்மனி

50. அண்ணன் தம்பி நால்வர்.
ஒருவன் ஓடுவான்; சளைப்பதில்லை.
இன்னொருவன் தின்பான்; திருப்தியில்லை.
அடுத்தவன் குடிப்பான்; நிறைவதில்லை.
மற்றொருவன் பாடுவான்; இனிமையில்லை.

51. என்னைத் தரையில் புதைத்தார்கள்.
என்போல் பலபேர் கிடைத்தார்கள்.

52. அதிக நீளமும் இல்லை;
அதிக அகலமும் இல்லை.
உடையவர் அளந்தால்
ஒரு சாண் நீளம்.

**ஸ்விட்ஸர்லாந்து**

53. ஒரே வீட்டுக்கு ஒரே ஆள்;
உருவில் மிகவும் சிறிய ஆள்.

**டென்மார்க்**

54. சாப்பாட்டுக்கு அவசியமாம்;
தனியாய்த் தின்ன முடியாதாம்.

**நார்வே**

55. வேலைக்காரிகள் வெள்ளை நிறம்;
வீட்டு வாசல் காக்கிறார்கள்.
வீட்டுக்காரி சிவப்பு நிறம்;
மேலும் கீழும் ஆடுகிறாள்.


56. ஒரு மரத்திற்குப் பன்னிரண்டு கிளை.
ஒரு கிளைக்கு நாலு கூடு
ஒரு கூட்டுக்கு ஏழு முட்டை
ஏழு முட்டையில் ஒரு முட்டை
பொன் முட்டை!

**ஸ்வீடன்**

57. அழையாத விருந்தினனாய்
அரண்மனைக்குள் செல்வேன்;
அரசர்முன் அமர்வேன்;
அறுசுவையோடு உண்பேன்.
நான் யார்?

58. அறுக்க உதவாத
கருக்கரிவாள் எது ?

லாப்லாந்து




59. அண்ணன் தம்பி இரண்டு பேர்;
அடியெடுத்து வைத்தார்கள்.
அண்ணன் நடந்தது பன்னிரண்டு மைல்;
தம்பி நடந்தது ஒரே மைல்.
அண்ணன் யார் ? தம்பி யார் ?

ஐஸ்லாந்து

60. மலையிலிருந்து விழுகிறவனுக்கு
வாயில்லை; கதறுவான்.
காலில்லை ஓடுவான்.
கண்டவர் உண்டோ ?

61. உள்ளே உரோமம்
வெளியே வழுக்கை.

பின்லாந்து

62. ஓராயிரம் பேர் தலை குனிவர்;
ஒருவரை ஒருவர் வணங்கிடுவர்.

63. ஐந்து கரை; நாலு கால்வாய்.
அது என்ன ?

எஸ்தேனியா

64. தன் பிள்ளைகளைத் தானே விழுங்கும்
தாயார் யார் ?

லுதுவேனியா

65. கத்திக் கத்திக் குலைக்கும் நாய்;
கதவுக்குப் பின்னால் ஒளியும் நாய்.

66. பளிங்கியை உடைத்தால் வெள்ளி;
வெள்ளியை உடைத்தால் தங்கம்.

ஹங்கேரி

67. இரும்புக் குதிரைக் குட்டி
என் முகத்தில் மேயுது.

68. காலையில் கடை திறக்கும்
இரவு வந்தால் இறுக மூடும்.

69. காலும் இல்லை;
கையும் இல்லை;
முகட்டைத் தாண்டி
மேலே போவான்.



70. வெள்ளைக் குடையை மேலே பிடிப்பார்
மெதுவாய்த் தட்டினால் ஒடிந்து விழுவார்.

செக்கோஸ்லோவேக்கியா

71. நாடு உண்டு; வீடு இல்லை;
காடு உண்டு; மரம் இல்லை;
ஆறு உண்டு; மீன் இல்லை.

72. குளத்துக்குள்ளே விழுந்தாலும்
கொஞ்சமும் நீர் அலையாது.

**பல்கேரியா**

73. கஷ்டப்பட்டு நூல் நூற்பார்;
கட்டிக்கொள்ளத் துணியில்லை.

**போலந்து**

74. எல்லை யில்லாத வயலிலே
எண்ண முடியாத ஆடுகள்.

75. வயல் வெளியில் ஆடும்போது
வைரத் தோட்டைத் தொலைத்தாளாம்.
சந்திரன் பார்த்தான்; சபலம் இல்லை.
சூரியன் பார்த்தான்; தூக்கிச் சென்றான்.

**ருஷ்யா**

76. வீடு வாசல் காப்பவன்;
விசுவாசமாய் இருப்பவ்ன்;
கடிக்க மாட்டான்;
குலைக்க மாட்டான்;
கதவை ஒட்டிக் கிடப்பவன்.

77. ஒருவரை இருவராய்க் காட்டும்;
உங்கள் வீட்டிலும் இருக்கும்;
எங்கள் வீட்டிலும் இருக்கும்;
அது என்ன ?

78. பார்வை யில்லாத மனிதன்
பல பேருக்கு வழி சொல்லுவான்.

79. உயிரில்லாத நீதிபதி
ஒழுங்காய்த் தீர்ப்பு வழங்குகிறுர்.

யுகோஸ்லேவியா


80. எல்லாரையும் கூவி அழைப்பான்;
ஆனுல்,
எவர் அழைத்தாலும் நகரமாட்டான்.
அவன் யார் ?

81. பகலிலே சும்மா யிருக்கும்;
இரவிலே ஆளைச் சுமக்கும்.

அல்பேனியா

82. ஆயிரம் ஆயிரம் முடிச்சு
ஆயிரம் ஆயிரம் ஓட்டை.

கிரீஸ்



83. ஏரித் தண்ணீரைப்
பாம்பு குடிக்குது.

84. அதற்கோ பெயருண்டு.
முதலிலே நான்கு கால்.
அடுத்தது இரண்டு கால்.
அப்புறம் மூன்று கால்.
அது என்ன ?

85. ஐந்து பேர் பிடிக்க
முப்பத்திரண்டு பேர் அடிக்க
ஒருவன் அணைக்க
ஐயோ, விழுந்தான்
ஆழக் குழியில் !

86. பாடும் குயிலுக்குப்
பளிங்கியிலே வேலி.

துருக்கி

87. ஓட்டு வீட்டில்
ஓட்டை. ஏழு.

88. வெட்ட, வெட்ட மீண்டும்
விளையும் பயிர்
என்ன பயிர் ?

இஸ்ரேல்

89. எல்லாருக்கும் என்னைப் பிடிக்கும்;
ஆனால்,
எவரும் என்னை ஏறிட்டுப் பாரார்.

90. மேலே செல்லும்; விமானம் அல்ல.
தண்ணீர் உண்டு; நதியும் அல்ல.

91. இரண்டு பெண்கள்—அவர்கள்
இரட்டைப் பிறவிகள்.
ஒருத்தி மேலே போனால்,
ஒருத்தி கீழே போவாள்.

92. வலையை விரிப்பேன்—நான்
செம்படவன் அல்ல.
வலையிலே பிடிப்பேன்—அது
மீனும் அல்ல.

எகிப்து

93. ஓரடி நீளம்
ஒருவரைச் சுமக்கும்.

94. உழவில்லை; நடவில்லை.
உணவுக்கு உதவிடுமாம்.
தண்ணீரில் பிறந்ததுவாம்;
தண்ணீரில் மறைந்திடுமாம்.


95. தலையில்லாதவன்
தண்ணீர் எடுக்கிறான்.

மடகாஸ்கர்

96. செத்தவன் குரல்
எத்தனை பேருக்குக் கேட்குது?

அல்ஜீரியா

97. வெள்ளையாக இருப்பான்;
வெட்ட வெட்ட வளர்வான்.



98. ஆற்றிலிருந்து பாறை வந்தது;
பாறையுமல்ல,
அதற்கு நான்கு கால்கள் உண்டு;
ஆனையும் அல்ல.
குண்டு குண்டாய் முட்டையிடும்;
கோழியுமல்ல.
என்ன அது ?

ஆப்பிரிக்கா பூர்வகுடி

99. சந்தைக்குக் கொண்டுபோன மாடு
தன்னோடே திரும்பி வந்ததாம்.

100. பிள்ளைகள் ஆடுவார்;
பெற்றவள் ஆடமாட்டாள்.


101. கரிய பாம்பு இரண்டு
அருகருகே படுத்திருக்கு.

மரிஷியஸ்

102. உயரே எறிந்தால் தரையில் விழுவான்;
தரையில் எறிந்தால் உயரே எழுவான்.

*103.* சின்னஞ் சிறிய தூசி விழுந்தாலும்
பொங்கி எழும் குளம் எது ?

அரேபியா



*104.* ஆனை போலப் பெரிதா யிருக்கும்;
அடக்கிப் பிடித்தால் கையில் அடங்கும்.


ஈரான்

*105.* சிரிப்பான்; வாயில்லை.
அழுவான்; கண்ணில்லை.
அலைவான்; காலில்லை.
அவன் யார் ?

*106.* பாரில் வந்து சேரும் முன்னே
பத்து மாதம் சிறைவாசம்.

107. கறுப்பன் ஒருவன்;
வெள்ளையன் ஒருவன்;
காண்பது இல்லை;
தொடர்வது உண்டு.

108. பகலெல்லாம் ஊரைச் சுற்றுவான்;
இரவில்,
கதவோரமாய்க் காத்துக் கிடப்பான்.



109. கூடப்பிறந்த இருவர்க்குக்
குறுக்கே சுவர் உண்டு.
ஒருவரை யொருவர்
ஒரு நாளும் பாரார்.

இலங்கை

110. வாங்குவோர் தனக்குப் பயன்படுத்தார்;
தனக்குப்
பயன்படுத்துவோர் பார்க்கமாட்டார்.

111. மரத்துக்கு மேலே பழம்;
பழத்துக்கு மேலே மரம்.

112. கறுப்புத் தொப்பி அணிந்த
கனவான்—அவர் யார் ?

113. எத்தனை அடி
அடித்தாலும்
இம்மியும்
வலிக்காது.



114. உச்சியிலே நீண்ட
இலை;
உடம்பெல்லாம்
கணுக் கணுவாம்;
தின்பதற்கோ மிக
ருசியாம்.
தேவையில்லை என்பவர் யார் ?


தாய்லாந்து

115. சின்னக் குகைக்குள்ளே
சிவப்புத்துணி—அது
எந்நேரமும் ஈரம்;
எளிதில் உலராது.

116. ஓட்டு வீட்டை
உடன் தூக்கிச் செல்கிறார்.
அவர் யார் ?

117. கணக்கில்லாத பிள்ளைகளைக்
கழுத்தைச் சுற்றிச் சுமக்கும் தாய்.
அந்தத் தாய்
எந்தத் தாய் ?

118 எலும்பு உண்டு; தோல் இல்லை.
கண்கள் உண்டு; தலை இல்லை.
தண்ணீரில் நீந்தும்;
தரையிலே நடக்கும்.




119. ஒற்றைக் காலால் ஆடுவான்;
'உம்'மெனப் பாட்டுப் பாடுவான்.

இந்தோ—சீனு

120. அம்மாவுடனே
ஆயிரம் குழந்தைகள்.
விடிந்ததும் அவர்கள்
அனைவரும் மடிந்தனர்.
அப்புறம் வந்தான்
அவன் ஒரு வீரன்.
அவனைப் பார்க்க
அனைவரும் அஞ்சினர்.

சீனு

121. முந்நூறு கால் உடையாள்
முணுமுணுப்புத் தான் அறியாள்;
வேண்டாத பேரை யெல்லாம்
விரட்டி ஓட்டும் வேலைக்காரி.

122. என்னைப் போலே இருப்பாய்;
ஆனால்,
ஏனோ பேச மாட்டாய்?

123. வீட்டுக்கு வந்த
விருந்தாளியைக்
குனிந்து குனிந்து
கும்பிடும்
கோழி எது ?



மங்கோலியா

124. தோல் வீட்டுக்குள்ளே
துணி வீடு;
துணி வீட்டுக்குள்ளே
ஐந்து பேரு.

125. குளத்தில் தலையை முக்கும் பறவை;
குடித்துக் குடித்துத் திரும்பும் பறவை;
வயலைக் கொத்தி நடக்கும் பறவை;
வார்த்தை கூறிச் செல்லும் பறவை.

126. பட்டுத் துணியைச் சுருட்ட முடியாது;
பத்தாயிரம் முத்தைக் கோக்க முடியாது.

திபேத்

127. கட்டி வைத்தால் நடந்து போவான்;
அவிழ்த்து விட்டால் சும்மா கிடப்பான்.

128. அப்பாவுக்கு இருபிள்ளைகள்;
அடி அடியென்று அடித்தார்கள்;

அடித்த பேரைத் தடுக்கவும் இல்லை;
அலறும் தந்தையைத் தேற்றவும் இல்லை;
ஆனாலும், அநேகர் ஆனந்தப்பட்டார்கள்.

சைபீரியா

129. கிளையுள்ள மரத்தைத்
தலையிலே தாங்கும்.
அது என்ன ?

130. நாக்கில்லாதவன்
நல்லது சொல்வான்.



131. அங்குல மாட்டுக்கு
அரை மைல் வால்.

கொரியா

132. வேளா வேளை குளிப்பான்
மிகவும் சுத்தக்காரன்.

133. எப்போதும் வயிறு
உப்பியே இருப்பாள்.
அவள் யார் ?

பிலிப்பைன்ஸ்

134. பிள்ளைக்கு வால் உண்டு;
பெற்றோர்க்கு வால் இல்லை.

135. "என்னைச் சுமந்தால்
உன்னைச் சுமப்பேன்."
—எவர் சொன்ன சொல் இது?

136. கால் இல்லை; தாவுவான்.
வாய் இல்லை; கத்துவான்.
அவன் யார்?

137. திறந்து திறந்து மூடினாலும்
சிறிதும் ஓசை கேட்காது.

ஜாவா

138. நாலு கால் உண்டு;
நடக்கத் தெரியாது.

139. வெள்ளைப் பெட்டியில்
வெள்ளியும் தங்கமும்.

140. உச்சியிலே கிரீடம்;
அவள்
உடம்பெல்லாம் கண்.

141. இரண்டு நண்பர்கள்
எப்போதும் சேர்ந்திருப்பர்.
ஒருவர் முன்னால் போனால்,
மற்றவர் பின்னால் போவார்

பிஜித்தீவு

142. இருபது பேர் தலையில்
எப்போதும் வெள்ளைத் தொப்பி உண்டு.

ஹாவாய்

143. சுவர் மூன்று தாண்டினால்
சுனை ஒன்று காணலாம்.

144. இருபுறமும் பாதை;
இடையிலே ஒரு தூண்.

மலேயா

145. பகலில் இருபுறமும்
இரவில் நடுவிலும்
இருக்கும்; அது என்ன ?



146. வெட்டலாம்; ஆனால்
பிளவு படாது.
அது என்ன ?

147. கத்திபோல் இலை
இருக்கும்;
கண்டாமணி போல்
பழம் இருக்கும்.
அது என்ன ?

பாகிஸ்தான்

148. இளமையில் கொம்பு உண்டு;
வளர்ந்ததும் கொம்பு இல்லை.

149. நீரிலே வாழும்; மீன் அல்ல.
கொம்புமே உண்டு; மாடு அல்ல.

150. தன் தலையைத் தானே விழுங்கும்
பிராணி எது ?

பர்மா

151. வெளுக்காத போர்வை;
வெள்ளையா யிருக்கும்.
நிரப்பாத குடம்;
நிறைந்தே இருக்கும்.

152. மெதுவாய்த் துடுப்பு நான்கு தள்ளிவர
விதானத்துள் சீமாட்டி அமர்ந்துவர.

153. நாணல் புதருக்கு
நடுவே ஓடுது சிறு படகு.

154. ஒரு கோப்பை பசும்பால்
ஊரெல்லாம் பெருகிடுமாம்.


155. சின்னஞ் சிறு அறையில்
சீராக வாழ்ந்திடுவார்;
கறுத்த உடை அணிவார்;
கவலையில்லாத் துறவி அவர்.
கள்ளைக் குடித்திடுவார்;
கடவுளைப் பாடிடுவார்,

## விடைகள்

1. வானம், நட்சத்திரங்கள், நிலா, சூரியன்
2. கை உறை
3. நீர்க்குமிழி
4. பெயர்
5. ஊசி
6. நெருப்பு
7. கண்ணுடி
8. துடைப்பம்
9. கண் இமைகள்
10. தூக்கம்
11. இடி, மழை
12. மரம், கரி, நெருப்பு
13 வாழைப் பழம்
14. பம்பரம்
15. நாக்கு
16. கோணி
17. நட்சத்திரங்கள்
18. கத்தரிக் கோல்
19. பறவை இறகு
20. காக்கை
21. கைவிரல்களிலுள்ள நகங்கள்
22. ஊசியும் நூலும்
23. வாழைப்பழச் சீப்பு
24. தெரு
25. ஹார்மோனியம் அல்லது பியாஞே
26. தலைமயிர்
27. தீக்குச்சி
28. கொசு
29. நாக்கு
30. வெங்காயம்
31. மெழுகுவர்த்தி
32. மீன்
33. மை
34. மெகுழுவர்த்தி
35. தாள், மை
36. முட்டை
37. பம்புக் குழாய்
38. நூல்கண்டு
39. முட்டை
40. பல், நாக்கு
41. குரல்
42. காற்று
43. எறும்புக் கூட்டம்
44. இருள்
45. தேங்காய்
46. செருப்பு
47. சூரியன், சந்திரன்
48. சருகு
49. விளக்கு, இருள்
50. நீர், நெருப்பு, பூமி, காற்று
51. விதை
52. செருப்பு
53. நத்தை
54. உப்பு
55. பல், நாக்கு
56. வருஷம், மாதம், வாரம், கிழமை, விடுமுறை நாளான ஞாயிறு

57. ஈ
58. பிறைச்சந்திரன்
59. கடிகார முட்கள்
60. அருவி
61. மெழுகுவர்த்தி
62. முற்றிய கதிர்கள்
63. கை
64. கடலில் ஆறுகள் விழுதல்
65. நாக்கு
66. முட்டை
67. க்ஷவரக் கத்தி
68. கண்
69. புகை
70. காளான்
71. பூகோளப்படம்
72. சூரிய ஒளி
73. சிலந்தி
74. வானம், நட்சத்திரங்கள்
75. பனித்துளி
76. பூட்டு
77. முகம் பார்க்கும் கண்ணாடி
78. கைகாட்டி
79. தராசு
80. மணி
81. படுக்கை
82. வலை
83. எண்ணெய், திரி
84. மனிதன் (தவழ்வது, தாளுக நடப்பது, கோல் ஊன்றி நடப்பது)
85. உணவு
86. நாக்கு
87. தலை (கண், காது, மூக்கு, வாய்)
88. தலைமயிர்
89. சூரியன்
90. மேகம்
91. தராசுத் தட்டுகள்
92. சிலந்தியும், பூச்சியும்
93. செருப்பு
94. உப்பு
95. வாளி
96. முரசு
97. நகம்
98. ஆமை
99. நிழல்
100. கிளைகளும், அடிமரமும்
101. ரயில் தண்டவாளம்
102. பந்து
103. கண்
104. கொசு வலை
105. மேகம்
106. குழந்தையின் பிறப்பு
107. இரவும், பகலும்
108. செருப்பு
109. கண்கள்
110. சவப் பெட்டி
111. அன்னாசிப் பழம்
112. தீக்குச்சி
113. உரல்

114. கரும்பு
115. நாக்கு
116. ஆமை
117. தென்னை மரம்
118. நண்டு
119. பம்பரம்
120. சந்திரன், நட்சத்திரங்கள், சூரியன்
121. துடைப்பம்
122. முகம் பார்க்கும் கண்ணாடி
123. தேயிலைக் கேத்தல்
124. பூட்ஸ், கால்சராய், கால்விரல்கள்
125. கட்டைப் பேனா
126. வானம், நட்சத்திரங்கள்
127. பூட்ஸ்
128. மத்தளம் அடித்தல்
129. கலைமான்
130. புத்தகம்
131. ஊசியும் நூலும்
132. சாப்பிடும் தட்டு
133. பானை
134. தவளை
135. செருப்பு
136. சமுத்திரம்
137. கண் இமை
138. நாற்காலி
139. முட்டை
140. அன்னாசிப் பழம்
141. கால்கள்
142. கை, கால் நகங்கள்
143. தேங்காய்
144. மூக்கு
145. கதவு
146. தண்ணீர்
147. அன்னாசிப்பழம்
148. சந்திரன்
149. நத்தை
150. ஆமை
151. தேங்காய்
152. ஆமை
153. நெசவு நாடா
154. முழு நிலா
155. தேனீ



ஆயிரம் பேர் அணிவகுப்பர்;
ஆனாலும் தூசி கிளம்பாது.



மேலே ஒரு விடுகதை; கீழே ஒரு விடுகதை. இரண்டும் வெவ்வேறு நாட்டு விடுகதைகள். இந்த இரண்டுககும் உங்களால் சரியான விடை கூற முடியுமா? கூறிவிட்டால்...? உடனேயே நீங்கள் கெட்டிக்காரர்களாகி விடமுடியாது. இந்தப் புத்தகத்திலுள்ள அத்தனைக்கும் நீங்கள் சரியான விடை கூற வேண்டும். அப்போதுதான் உண்மையிலே நீங்கள் கெட்டிக்காரர்கள் என்ற பட்டத்தைப் பெறமுடியும்!



எத்தனை அடி அடித்தாலும்
இம்மியும் வலிக்காது.

ஜீவன் பிரஸ், சென்னை-5

# TAMIL RIDDLES TO ENTERTAIN & ENLIGHTEN

பெரியோர் சிறியோர் இன்பப் பொழுது
போக்கிற்கு இன்றியமையாதது

# விடு கதைகள்

மனமகிழ்ச்சிக்குத்திரட்டப்பெற்றவை



திரட்டியவர் : **பண்டிதர் K. J. வேதமுத்து**

8-குறுக்குத் தெரு, 206, T. P. சத்திரம்,
கீழ்ப்பாக்கம் சென்னை-10



(பிரதிகள் : எம்மிடமும் / புஸ்தக வியாபாரிகளிடமும்
நியூஸ் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்)

காபிரைட்] 1971 [விலை 55 பை.



Pandit K. J. Vethamuthu

# Children's Delight

# சிறுவர் அறிவுக்கதிர்

ஈரோட்டில் : தோற்றம் 1935ஹு
நிறுத்தம் 1947ஹு
நடந்தகாலம் : 12 ஆண்டுகள்.
ஆண்டு 1971 புதுப்பித்தில்
விவரம் அட்டை 3ம் பக்கம் பார்க்கவும்

## (வரலாறு விளக்கம்)

இது தமிழ் நாட்டில் சிறுவர்க்கென்று முதன் முதல் தோன்றியமாதத் தமிழ் இதழ் மேனாட்டவரைப்போல நம் தம் தமிழ் மொழியில் சிறுவர்க்கென ஒரு மாத இதழ் இல்லையென்ற இழிவைப் போக்கவே இப்படத்தில் இருக்கும் அடியேன் பொருள் வருவாயைக் கருதாது 1935-ம் ஆண்டில் தொடங்கினேன் நமது தமிழ் நாட்டுப் பெரியார் **E.V.** ராமசாமி நாய்க்கர் இதனை அச்சிட்டு உதவினார்கள். பேரறிஞர் **C.N.** அண்ணாதுரை, அக்காலக் கல்வி மந்திரியார் வர்க்கீஸ் பள்ளித் தலைவர்கள் கல்வி அதிகாரிகள்





இதற்குப் பேராதரவு அளித்து வர நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து தமிழ்நாடு, இலங்கை, தென்னாப்பிரிக்கா, முதலிய இடங்களில் பரவிய பெருமை பெற்றோங்கியது: சுமார் ஆயிரம் சந்தாதார் போல் இருந்தார்கள்.

1947-ம் ஆண்டு, அடியேன் இதனைச் சீரும் சிறப்புமாக நடத்த சென்னை வந்தேன். ஆனால், தமிழ்ப் பண்டிதர் பணி, E S.L.C. உரை நூல்கள், வினாவிடை நூல்கள் மேனாட்டவருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தல் ஆகிய பல பணிகளில் ஈடுபட்டமையால் அதை இதுவரை நிறுத்திவைக்க நேர்ந்தமைக்கு மிக்வும் வருந்துகிறேன்.

ஆயினும், என் மாணவர்களுள் தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கானவர்களும், மேல் நாட்டவருள் நூற்றுக் கணக்கானவர்களும் என்னை மறுமுறையும் புதுப்பித்து, முந்தின நிலையிலும் அதிகம் சிறப்பாக நடத்த வேண்டுமென்று என்னைத் தூண்டினமையால் அவர்கள் விருப்பத்துக்கு இணங்கி 1971 புதுப்பிக்க, எல்லா முயற்சிகளும் வெகு தீவிரமாக நடந்து வருகின்றன. நன்கொடையும் பலர் ஆங்காங்கு திரட்டுகின்றனர். இம்முயற்சியில் ஈடுபடும் எனக்கு இதனைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் ஒத்தாசையும், ஆதரவும் தர வேண்டுகின்றேன்.

நன்றி கலந்த வணக்கம்,

இங்ஙனம் உங்கள் அன்பன் **K. J.** வேதமுத்து

# TAMIL RIDDLES

## சிறுவர் அறிவு விருந்துக்கு

## ஆராய்ந்து எடுத்த அரிய

# விடுகதைகள்

(பள்ளிப் பாலர்கள் பெரியோர்களின்
இன்பப் பொழுது போக்கிற்கு இன்றியமையாதது)

---

திருத்திய இரண்டாம் பதிப்பு

---


*தொகுத்தவர் :*

**பண்டிதர் K. J. வேதமுத்து**

1. *''சிறுவர் அறிவுக்கதிர்'' பத்திராதிபர்*
2. *போதனுமுறை:உயர்தரப்பள்ளிகளின் தமிழ் ஆசிரியன்*
3. *உயர்தர ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியன்*
4. *பல தமிழ் உரை நூலாசான்—மற்றும் பல*



*வெளியிடுவோர் :*

**"CHILDREN'S DELIGHT" OFFICE**

**''சிறுவர் அறிவுக்கதிர்'' செயலகம்**

கீழ்ப்பாக்கம் : : சென்னை-10



*பதிப்புரிமை]*



*1970* *விலை* 55 ந.பை.

# முதல் பதிப்பு முன்னுரை

இச் "சிறுவர் விருந்து விடுகதைகள்" யான் ஈரோட்டில் "சிறுவர் அறிவுக் கதிர்" மாத சஞ்சிகையின் பத்திராதிபராக இருந்த சமயம் சிறுவர் சிறுமியர் எழுதி அனுப்பியவைகளும் எம் பத்திரிகையில் பிரசுரித்தவைகளுமாகும். எம்மிடமுள்ள ஆயிரத்துக்கு அதிகமான விடுகதைகளில் ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகள் விளங்கக் கூடிய விடுகதைகளை மட்டும் யான் ஆராய்ந்து தற்போது வெளியிடுகின்றனன்.

இவ் விடுகதைகள் சிறுவர் சிறுமியர் இன்பப் பொழுது போக்கிற்கு மட்டுமல்ல, தமிழ் வாசித்துப் பழகவும், வாசித்து யோசனை சக்தியை விருத்தி செய்யவும் பேருதவி செய்யும் என்பது எம் துணிவு.

நீளமான விடுகதைகளையும், மேல் வகுப்பு மாணவர்கள் அறிவுக்கு ஏற்ற விடுகதைகளையும் திரட்டிக் காலக் கிரமத்தில் இரண்டாம் விருந்து விடுகதைகளாக வெளியிட யோசனை.

இவ்விடுகதைகளில் சில எம்மால் சுயமாகச் செய்யப் பட்டவை. பல நம் தமிழ் நாட்டில் வழங்கி வந்தவைகளைத் திரட்டியவையாகும்.

இச்சிறு நூல் சிறுவர் உள்ளத்தை மகிழ்வித்துப் பரமானந்தம் கொள்ள உதவும்படி எல்லாம் வல்ல இறைவனை வணங்கித் தமிழ்நாட்டு சிறுவர்களுக்கு இதனை சமர்ப்பிக்கின்றனன். அன்பர்கள் ஆதரவு தரு வேண்டுகிறேன்.

சென்னை 1—2—1963 K. J. வேதமுத்து

# இரண்டாம் பதிப்பு முன்னுரை

பள்ளிப் பிள்ளைகளும் பிறரும், சிறு நூலுக்குப் பேராதரவு தந்தமையாலேயே இவ் விரண்டாம் பதிப்பு வெளி வருகிறது என்று சொல்லிக்கொள்ள மகிழ்ச்சி அடைகின்றனம். இதற்கும் பள்ளி ஆசிரியர்களும், பொது மக்களும், போதிய ஆதரவு காட்டினால் மூன்றும் பதிப்பும் அதி சீக்கிரம் வெளிவரக் கூடும். வணக்கம்.

கீழ்ப்பாக்கம் சென்னை இங்ஙனம்,
30—11—1970 பண்டிதன்: K. J. வேதமுத்து

# சிறுவர் அறிவு விருந்துக்கு

ஆராய்ந்து எடுத்த அரிய

# விடுகதைகள்

ஒவ்வொரு விடுகதை முடிவிலும், இடத்துக்கு ஏற்றபடி யார் ? என்ன ? என்பவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

## அ—ஔ

1 அடிசிவப்பு, நடுபச்சை, உச்சி வெள்ளை. என்ன?
2 அடித்தால் அழுவான். பிட்டால் சிரிப்பான். யார்?
3 அடிமத்தளம். இலை பர்வதம். குலை பெரிது. காய் துவர்ப்பு. பழம் தித்திப்பு.
4 அடி மலர்ந்து நுனி மலராப் பூ. என்ன பூ?
5 அடுக்கடுக்காய்ப் பட்டுடுத்தி அங்காடியிலே தங்கியிருப்பாள் தங்கம்மாள், அவள் யார்?
6 அடை மழை பெய்த அடுத்த நாள் காலை படை படையாய்ப் பறந்தன. பூச்சிகள் பட்சிகள், அவற்றைப் பட்சித்தன.
7 அணில் ஏறுத அழகு கொம்பு; என்ன கொம்பு?
8 அண்ணன் தம்பி ஐந்து பேர். அண்ணன் ஆதரவு அற்று விட்டால் தம்பிமார். பாடு திண்டாட்டம்.
9 அதோ போகிறான் குள்ளன். அவன் காலடி காணோம்.
10 அந்தரத்தில் பறந்து வரும் பருந்தே அல்ல. அழகான வாலுமுண்டு. அனுமாரல்ல.
11 அப்பன் சொரியன், ஆத்தாள் சடைச்சி அவர்களுக்குப் பிறந்த நான் சர்க்கரைக் கட்டி. என்ன?
12 அப்பன் பணத்தை எண்ண முடியவில்லை. அம்மா புடவையை மடிக்க முடியவில்லை.

☞ (இதன் விடைகளை 21-ம் பக்கம் பார்க்கவும்)

13 அம்பலத்திலாடும் அழகம்மாளுக்கு அங்கம் எல்லாம் தங்கக் கண்ணாடி.

14 அரிசி போல மலர் மலரும். அம்மாடி என்ன காய் காய்க்கும்.

15 அறுகையும் சருகையும் அமிர்தமாக்கும் அரும் பொருள்.

16 அரைத்தால் அழுகை வரும். சமைத்தால் ருசி வரும்.

17 அள்ள முடிகிறது. கிள்ள முடியவில்லை. சொல்லு.

18 அழையாத வீட்டுக்கு ஆயிரமாயிரம் விருந்தாளி.

19 அறைகள் அறுநூறுக்கும் அதிகம். அத்தனைக்கும் அளவு ஒன்றே.

20 ஆகாயத்தில் அங்கவஸ்திரம் ஆறப் போட்டிருக்கிறது.

21 ஆக்கும் கறிக்கும் ஆகும் பூ. அனைவர்க்கும் ஆகும் பூ. தரணியில் என்ன பூ.

22 ஆச்சி அம்மா மட்டம். ஆனால் அவள் ஆத்திரமான ஓட்டம்.

23 ஆடு அக்கரை. அதன் புழுக்கை இக்கரை.

24 ஆணுக்குக் கொம்பு உண்டு. பெண்ணுக்குக் கொம்பு இல்லை. அதன் பேர் கூறு.

25 ஆயாள் சப்பாணி. அவள் மகள் இழுப்பாணி.

26 ஆயாள் வீட்டுத் தோட்டத்தில் ஆடி அசையுது அழகான பாம்பு.

27 ஆவியாய் மாறும், கல்லாயும் மாறும். அனுதினம் அவசியம் வேணும்.

28 ஆளில்லாக் காட்டில் அயோத்தி ராமன் கையேந்தி நிற்கிறான்.

29 ஆள் இறங்காக் கிணற்றிலே கோல் இறங்கிக் கூத்தாடுது.

30 ஆற்றிலே ஐந்து மரம். அசையுதே யன்றி, அசைத்துப் பிடுங்க முடியவில்லை.

31 ஆனையாக ஆக்குவதற்கு ஆயிரம் கட்டு அவசியம்.

32 ஆனை போய் ஆறு மாதம் அதன் தாரை மறையவில்லை.

33 ஆறு காலடா. கண் இரண்டும் கடுகடா. ஈயடா இளிச்ச வாயா!

34 இங்கிருந்து பார்த்தால் இரும்புக் குண்டு. எடுத்துப் பார்த்தால் இனிப்புப் பழம் என்ன?

35 இத்தனை தண்ணீருக்குள் சித்திரப்பூ.

36 பூத்தால் பூந்தோட்டம் பாழ்.

37 இரண்டு புடைக்கிறது. நான்கு குத்துகிறது. ஒன்று துழாவுகிறது.

38 இரண்டு வீட்டுக்கு ஒரு விட்டம்.

39 இரவும் பகலும் போகும். இடம் விட்டு நகராது.

40 இரவெல்லாம் பூங்காடு. விடிந்தால் வெறுங்காடு.

41 இரு சிறு துவாரக்குழல். எந்த நேரமும் காற்றை உள்ளே இழுக்குது. வெளியே தள்ளுது.

42 இருட்டு வீட்டிலே இருக்குது எருமைக்கடா.

43 இளமையிலே கறுப்பு.முதுமையிலே வெளுப்பு.என்ன

44 இவ்வளவு கர்ணும் பையன், அவ்வளவையும் சுமக்கிறான். அமைதியாய் இருக்கிறான்,

45 இவ்வுளவுண்டு பையனுக்கு அவ்வளவுண்டு உருமால்.

46 இறங்காத கிணற்றில் எண்ணாயிரம் பூ. என்ன?

47 இறந்து போனவன் எங்கெல்லாமோ போகிறான்.

48 ஈட்டிகளுக்கு இடையில் இருந்து வந்தாலும்எள்ளளவு சேதமும் இல்லாதிருக்கிறது.

49 ஈர்க்குப் போன்ற தம்பிக்குப் பந்து போல தலை.

50 ஈனமான ஜீவன். ஊனம் செய்ததை உரைக்கவும் படுமோ.

51 உச்சாணிக்கிளையிலே உரல் கட்டித் தொங்குது.
52 உடலில்லா முண்டம், ஊரெல்லாம் கண்டோம்.
53 உண்ணத்தின்ன உதவிய பண்டம; திண்ணைக்கும் அப்பால் தெருவில் கிடக்குது.
54 உத்தியோகமில்லாத ஒருவன் ஊரை சுற்றிவருகிறான்.
55 உருண்டிருக்கும் பாறை மேலே; திரண்டு நிற்குது கோரைப்புல்.
56 உருண்டை வெள்ளைக்கல் உடைந்ததே தம்பி. உள்ளே இருந்து ஒழுகினதே இருவிதத் தைலம்.
57 உலகத்துக்கெல்லாம் ஒரே மூடி.
58 உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ என்ன?
59 உன்னுடன் ஒருவன் ஒட்டிக் கொண்டிருக்கிறான்.
60 உன்னையும் என்னையும் அறியாமல் என்னமாய் நுழைந்தது தண்ணீர்.
61 ஊசி நுழையாக் கிணற்றிலே ஒரு படி தண்ணீர். ருசியான தண்ணீர்.
62 ஊசி போல் மரம், காசுபோல் இலை. என்ன?
63 ஊருக்கெல்லாம் ஒரே கல்.
64 ஊருக்கெல்லாம் ஒரே தப்பட்டி.
65 உருண்டைப்பெட்டி உயர்தரப்பெட்டி. உள்ளே இருப்பது வெள்ளைப் பொருள் வெள்ளைப் பொருளின் விசித்திரம் எவராலும் விவரிக்க முடியாது.
66 எங்கும் இருட்டில் இரை தேடும். பங்குக் கறி சோறும் பாலும் திருடும்.
67 எட்டாத இடத்தில் மிட்டாய்ப் பொட்டணம்.
68 எட்டு மொட்டை எலும்பு, இருநூறு சிறுகுடல்.
69 எல்லாருக்கும் நல்லவன். மழை வந்தால் மறைகிறான்.

70 எலும்பு இல்லாப் பையன், கிளை இல்லா மரத்தில் ஏறுகிறான்.

71 எல்லார் வீடும் பூட்டிக் கிடக்கிறது, எங்கள் ஆயாள் வீடு திறந்து கிடக்கிறது.

72 எவரும் இல்லாத வேளையில் எங்கள் அண்ணன் சுவர் வைக்கிறான்.

73 எவரும் ஏறாத மரத்தில் என் இளைய தம்பி ஏறுகிறான்.

74 எள்ளளவு உருவத்தான். இரவும் பகலும் கள்ளத்தனமாய்க்கடித்துக் குடிக்கிறான். இரத்தம்.

75 என்னோடு இருக்கும சிறு மணி, எனக்குத் தெரியாது உனக்குத் தெரியும்.

76 ஏணி மேலே கோணி: கோணி மேலே குண்டு: குண்டு மேலே புல். புல்லுக்கு உள்ளே பூச்சி.

77 ஏழு மைலுக்கு அப்பால் எருமைக் கடா கத்துகிறது. கத்தும் சத்தம் காதைத் துளைக்கிறது.

78 ஏறாத மரத்தில் எண்ணூறு காய்.

79 ஏற்றத்தின் மேல் இளம் பாம்பு.

80 ஏற்றம் இறைக்காமல் கிணறு வற்றுகிறது.

81 ஐந்து ஊருக்கு ஒரு மந்தை வெளி.

82 ஐந்து பேருக்கு இளையவன்; கலியாணத்துக்கு மூத்தவன்.

83 ஐயனை விட்டுப் பையன் போகான். பையனை விட்டு ஐயன் போகான்.

84 ஒரு உழவு மழை பெய்தும் ஒரு ஓடும் நனையவில்லை

85 ஒரு கிணற்றுக்கு ஒரே மீன்.

86 ஒரு ஜாடியில் இரு தைலம்.

87 ஒரு ஜாண் உயரச் சாக்குப்பை. வருவதை எல்லாம் வாங்கிக் கொள்ளும் பை. மறுநாள் காலை வாங்கினதை எல்லாம் வெளியே கொட்டும் பை. என்ன பை?

88 ஒரு துரைக்கு இரு தொப்பி

89 ஒரு நெல் குத்தி வீடெல்லாம் உமியாச்சு.
90 ஒற்றைக்காலில் ஓடுவான். ஓய்ந்து போனால் உட்கார்ந்து விடுவான்.
91 ஒற்றைக் கால் கூடாரம். ஒருவர்க்காகும் கூடாரம். ஊரெங்கும் எடுத்துப் போகலாம்.
92 ஒற்றைப்பிள்ளை பெற்றவள், உயிரை இழந்தாள்.
93 ஓகோ இராஜா! உயர்ந்த ராஜா! தோள் மேல் என்ன? தொண்ணூறு முடிச்சு.
94 ஓகோ என வளர்ந்திருக்கும். ஒரு இலைக்கு ஒரு இலை உருவம் சரியில்லை.
95 ஓகோ சிந்தாயி! ஒரு கூடை முடியாயி!
96 ஓங்கி வளர்ந்த மரத்தில் ஒரு பிடி இலை இல்லை.
97 ஓடிருக்க உள்ளே சுருங்கும் பழம் என்ன பழம்?
98 ஓடுங்குதிரை. ஒளியும் குதிரை, தண்ணீரைக் கண்டு தயங்குது குதிரை.
99 ஓடுவான் சாடுவான். ஒற்றைக்காலில் நிற்பான்.
100 ஓடி மூடியிருக்கும். உள்ளே சோறு இருக்கும். உடைத்தால் சோற்றை உண்ணலாம்.

## க—கோ

101 கடகட, குடுகுடு, நடுவே பள்ளம்.
102 கட்டாமல் கறக்காமல் நின்ற நிலையில் ஒரு படி பால்.
103 கட்டுப்பட்டிருந்த மன்னனை விட்டுப் பிரிந்து வந்தேனே.
104 கட்டைக் கொம்பு காளை, கிட்டப் போனால் முட்டுது.
105 கண்காண உருவுண்டு. கட்டிப் பிடிக்க உடலில்லை
106 கண்டம் துண்டமாய்க் கரி தின்னும் நான்; யார்?
107 கண்டு காய் காய்க்கும், காணாமல் பூ பூக்கும்.
108 கண் உண்டு. தலை இல்லை. வயிறு உண்டு; குடலில்லை.

109 கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது. கையிலே தொட்டால் காணாமல் மறையுது.

110 கரடு முரடு கசப்புக்காய்! கறிக்கு உதவும் சொறிக்காய்.

111 கருங்கல் கறுப்பு. கண்ணாடி வெளுப்பு. உண்டாகும் விதம் உரைத்தால் உவப்பு.

112 கரு மணலைக் கசக்கிப் பிழியக் கண்டது. கண்ணாடித் திராவகம்.

113 கர்ப்பத்தில் பிறவாத பிறப்பு: காலத்தை உண்டாக்கும் பிறப்பு, என்ன பிறப்பு.

114 கல்லுக்கும் முள்ளுக்கும், பயப்படாதவன் பள்ள நீரைக் கண்டால் பயப்படுகிறான்.

115 கழுத்து உண்டு. தலையில்லை, வயிறு உண்டு குடலில்லை கை உண்டு விரலில்லை.

116 கறி பொரியலுக்காகாத புளி என்ன புளி.

117 கறுத்த பாறைக்கு வெளுத்த வேர்.

118 கறுத்த உருவம். கானகத்தில் இருக்கும் உருவம். கறையானைக் கண்டு களிக்கச் சாப்பிடுது.

119 கறுப்புச் சட்டைக்காரன், காவலுக்கு கெட்டிக்காரன்.

120 காடுங் கருங்காடு. கம்பும் கருங் கம்பு.

121 காடெல்லாம் சுற்றிவரும், கண்ட தண்ணீர் குடிக்காது.

122 காட்டிலே கறுப்பர்கள் கூடி கயிறு போடுகிறார்கள்.

123 காட்டுப் பக்கம் கண்டது, சொட்டுச் சொட்டு இரத்தம்.

124 காதில்லை கண்ணுண்டு. காலில்லை வாலுண்டு. கண்டவர் பயந்து காத தூரம் ஓடுவார்.

125 காயில் கறிப்பதம் தப்பிய தொண்டி; காஞ்சியில் கஞ்சி வாங்கிக் குடிக்கிறாள்.

126 காயும் கறிக்கு ஆகும். பூவும் கறிக்கு ஆகும். இலையும் கறிக்கு ஆகும். இக்கதை என்ன?

127 காய் என்று கண்டது உண்டு. கனி என்று தின்றது இல்லை.

128 காய் காய்க்கும். பூ பூக்கும். இலை இல்லை.

129 காலில்லாத கபடன், கண்ட இடமெல்லாம் போகிறான்.

130 காலில்லாத பந்தலைக் காணக் காண விநோதம்.

131 காலில்லை, கையில்லை, கண்களுண்டு. வாலுண்டு சிறகுண்டு. என்ன?

122 காலை யானவுடனே காது வெடிக்கக் கதறுகிறான் ஒருவன். அவன் யார்?

133 காலோ எட்டிருக்கும். கைப் பிடியோ ஒன்றிருக்கும். அகல விரிந்திருக்கும்,

134 கால் பாகம் கறுப்பு. உடைத்தால் பருப்பு. தின்றால் கசப்பு.

135 காவி உடை இல்லாத கள்ளத்தவசி, கரையோரம் கடுந்தவம் செய்கிறான்.

136 காற்றிலே பறந்து போகும் கண்ணாடிக்குண்டு. கை பட்டால் பட்டுப் போகும், கண்ணாடிக்குண்டு.

137 காற்றும் நுழையாத கண்ணாடிக்குண்டில் கலங்கல் நீரும் உயிரும் உண்டு.

138 காளை கட்டிக் கிடக்கிறது. கயிறு ஓடிக் கிடக்கிறது.

139 கிணற்றுக்குள்ளே கிண்ணம் மிதக்கிறது.

140 கிணற்றைச் சுற்றிக் கோரைப்புல்.

141 கிணற்றைச் சுற்றி கல் கட்டு.

142 கிண்ணம் போல் பூ பூக்கும். கிடாரம் போல் காய் காய்க்கும்.

143 கிளை இல்லாத மரத்தில் எலும்பு இல்லாத மனிதன் ஏறுகிறான்.

144 குச்சி போல காய்கள் உச்சியில் தொங்குது. மெச்சி மக்கள் கறிக்காக நச்சி நாளும் வாங்குகிறார்.

145 குடிக்கத் தண்ணீர் உண்டு. குளிக்கத் தண்ணீர் இல்லை.

146 குட்டைத் தண்ணீரில் வற்றிப் போகப் பட்டக்காரன் பட்டுப் போனான்.

147 குண்டு சட்டிக்கு உள்ளே கெண்டை மீன்.

148 குண்டு குண்டாய்ச் சிறு பழங்கள். குலை குலையாய்த் தொங்குது.கண்டு பறித்தின்று பார்க்க நன்றாய் ருசியும் காணுது.

149 குண்டுச் சட்டியிலிருந்து குதித்தவன், பல்லைக்காட்டிச் சிரிக்கிறான்.

150 குத்துக் குருவிக்கு ஒரு முழ வால்.

151 குளம் நிறையத் தண்ணீர். குருவி குடிக்க இடமில்லை.

152 குற்றினது முளைக்கும், பொரித்தது நடக்கும்.

153 கையிலே கை வரிசை காட்டுகிறார் கறுநிறப் பிள்ளையார்.

154 கையும் காலுமில்லாக் கட்டையனுக்குக் கை கொடுத்தால் காலை. மாலை கட்டாயம் நடப்பான்.

155 கொக்கு நிற்க குளம் வற்றுது.

156 கொடியாய்ப் படர்ந்த செடி அடியில், குளவிக் கற்கள் கொள்ளை கிடக்குது.

157 கொடியோ கோணல் மாணல். இலையோ தாறுமாறு பூவோ மஞ்சள், காயோ கசப்பு.

158 கொளிஞ்சிக் காட்டுக்குள் ஒளிந்து கிடக்குது கொட்டாப்புளி.

159 கொளுத்திய பின்பு கோடிக் கும்பிடு.

160 கோடி கோடி வெள்ளிப்பணம். ஓடி விடுது காலையில் வெளிப் பயணம்.

161 கோணல் எத்தனை இருந்தாலும் குணமும் இனிப்பும் குறையாது.

162 கோலாகாலமாய்க் கூடி வாழ்வோம், காலம் வரவே கூடியே மாழ்வோம்.

163 கோயிலில்லை குளமில்லை, கொட்டுக் கொட்டுகிறான் ஒருவன்.

## ச...சே

164 சங்கப் புதருக்குள் சபாஷ் பெண், தங்கக் காசு தந்தாலும் வெளியே வரான்.

165 சங்கீதக் கருவிக்குத் தக்க பொருள் ஆனாய், சந்நியாசிகள் தருமக் கலனும் ஆனாய்.

166 சட்டையைக் களைந்து சட்டென்று குதித்தான் குட்டையில்.

167 சளசள என்னுமாம் சண்டைக்குப் போகுமாம். அது கிடக்குது பொந்துக்குள்ளே.

168 சன்னல் பின்னக் கயிறு ஜாதிலிங்கக் கயிறு, எண்ணெய் படாத கயிறு. என்ன கயிறு?

169 சாடி மேலே குரங்கு. குந்தியிருக்குது பார்.

170 சாண் உயரப்பையன், வைத்ததெல்லாம் சுமக்கிறான்.

171 சாந்து பூசின வீட்டில் சாய்ந்து நிற்கத் தாவில்லை.

172 சாலுக்குள் சப்பட்டைக் கல்.

173 சிக்கிட்டிப் பையனுக்குத் துக்கிட்டி நாமம்.

174 சிங்காரப் பூப்பூத்து வெண்காரக் காய் காய்த்துத் தொங்காத காய். என்ன காய்?

175 சித்திரச் சிங்காரக் கோட்டைக்குப் போக வழியுண்டு. திரும்ப வழியில்லை,

176 சிறுகத் தோன்றிப் பெருக வருவது என்ன?

177 சிறு சிறு கதவுகள்? செய்யாக் கதவுகள், திறக்க அடைக்கத் தேர்ந்த கதவுகள்.

178 சிறு வீடு முழுவதும் சிராய் இருக்கிறது.

179 சின்னக் கிணற்றில் கின்னம் தண்ணீர்.

180 சின்னச் சிமிழிலே சிங்காரக் கண்ணுடி.

181 சின்னச் சின்னப் பாத்தி.சிங்காரப் பாத்தி. அழகுண்டு ஆவது ஒன்றுமில்லை.

182 சின்ன வெங்காரம். வீடெல்லாம் சிங்காரம்.

183 சின்னக் கூண்டில் சிக்கல் மக்கல் வேலை.

184 சின்னம் சிறிய சிங்காரக் குழல். சிந்தும் திராவகம் நிறைந்த குழல். சிந்தனைக்கானதை செய்யும் குழல்,

185 சுட்டு விட்ட பொருள், சுப்பல் ஏறுது.

186 சுத்தக் கறுப்பாய்த் தோன்றி வந்தது. மெத்த வெள்ளையாய் வெளுத்துப் போனது. விவரம் தெரிந்தால் விளங்கச் சொல்லுங்கள்.

187 சும்மாவும் இருக்காது. சொல்லவும் தெரியாது,

188 சுழன்று வருவேன். தூர இடம் போய்ச் சேர்வேன்.

189 சுருக்குப் பைக்குள்ளே சுக்குட்டி மத்தளம்.

190 சுறுக்கென்னும் முள்ளைப் பொறுக்க முடியாது.

191 சுற்றி நந்தவனம். நடுவே குளம்.

192 சுற்றிலும் கல்கட்டு, நடுவே வெள்ளிக் கட்டு.

193 செந்தோல் பிராமணனுக்குச் சேர்ந்தது ஒரு நாமம்.

194 செம்பு நிறையக் கெம்புக் கல்.

195 சென்னி கிட்ட இரண்டு சேகண்டி, கேட்பதல்லாமல் கொடுப்பதில்லை.

196 சேற்றுக்கு உள்ளே சிவப்புக் காடை.

197 சேற்றைக் கண்டால் படுக்கும், நாற்ற நரகலை தின்னும். கூற்றுவன் நிறத்தில் தோன்றும்.

## த—தோ

198 தச்சன் செய்யாக்கதவுகள், தானே திறக்கும் தானே மூடும்.

199 தடியனும் பொடியனும் சந்தைக்கு வர, தடியனை

வாங்கித் தின்றேன். பொடியனை எடுத்துப் போட்டு கொண்டேன்.

200 தரை மேலே தடுக்குப் போட்டேன். தள்ளவோ கொள்ளவோ முடியவில்லை.

201 தட்டத் தட்ட வட்டம், காயக் காய விறகு.

202 தட்டுத் தட்டாய் விரிந்திருக்கும். தண்ணீர் சொட்டும் தங்காது.

203 தட்டும் கருந்தட்டு. கம்பும் கருங் கம்பு.

204 தட்டுத் தின்னும் விறகு தின்னும். தண்ணீர் கண்டால் தயங்கி நிற்கும்.

205 தண்டு மேலே தாழி. தாழிக்கு உள்ளே தண்ணீர், தண்ணீருக்குள் கொடி, கொடிக்கு மேலே பூ.

206 தண்ணீர் இல்லாக் குட்டையிலே தத்தளிக்குதாம் கெண்டை மீன்.

207 தண்ணீரில் ஓடிவரும் தத்துவப் பசு, தரைமேலே ஓடாது வித்துவப் பசு.

208 தண்ணீரில் நீந்தி வரும், தரையிலே தாண்டி வரும்.

209 தலை மேலே முளைத்திருக்கும் இலை யில்லா மரம்.

210 தாய் தெருவிலே தவிக்கிறாள். அவள் மகள் அரசர் கொலுவில் அமர்ந்து இருக்கிறாள்.

211 தாய் தள்ளப்பட்டுத் தரையில் கிடக்கிறாள், மகள் மகாராஜா முடியில் மகிமையோடு இருக்கிறாள்.

212 தாய் தலை விரித்தவள். மகள் கண் சிமிட்டி.

213 தீப் பொரி பறக்குது எரியாது.

214 தீனிக்குக் குறைவில்லை. தீர்த்தம் பட்டால் சாவு.

215 தேகம் எல்லாம் சொறி, நளபாக மரக் கறி.

216 தேடித் தேடிச் சேர்த்த பொருளை நாடி வந்தவன் நாசமாக்கி விட்டான்.

217 தேசம் எல்லாம் ஓடிச் சேர்ப்பதைத் தேடிக் கொட்டி விட்டால், கொடுப்பது இல்லை.

218 தேன் போல ரசம். தேர்ந்து எடுத்த ரசம். தெரு விலே விற்கும். தெரிந்தால் சொல்லு.

219. தொங்கத் தெரியும். அங்குமிங்கும் அசையத் தெரியும். எங்கும் போகாமல் ஏங்கித் தவிக்கிறது.

220 தொந்தி வயிருன் சந்தைக்கு வந்து குந்தி யிருக்கிருன்.

221 தொட்டவுடனே சட்டென்று சாய்ந்தாள் பொட்டி மகள்.

222 தோகை மயிலாள் சொகுசுக் காரி. தோட்டி மகன் கையில் தொல்லைப்படுகிருள்.

223 தோலாலான சூட்சுமக் கதவுகள், தேவை நேரத்தில் திறக்கும் மூடும், தெரிந்தவர் சொல்லுங்கள்.

224 தோட்டச் சிங்காரி தோகையர் தலை முடி அலங்காரி.

225 தோல் உரிந்து போயும் துன்பம் இன்றிச் சுகமாய் இருக்கிருள். ஒரு நொண்டி.

226 நடுக்காட்டில் வைத்த வெண்ணெயை ஈயும் எறும்பும் நாடவில்லை.

227 நாலு காலுண்டு, விச வாலில்லை.

228 நாலு மூலைப் பெட்டி. நந்தவனப் பெட்டியில் ஓடுது குதிரைக் குட்டி.

230 நான் ஏறும் நல்ல குதிரைக்கு உள்ள இடமெல்லாம் ஓட்டை.

231 நான்கு பேர் நனையாமல் போகிருர்கள். இரண்டு பேர் நனைந்து கொண்டு போகிருர்கள்.

232 நீட்டிக் கொண்டு நெடுகப் படுக்கும். சுருட்டிக் கொண்டு மூலையில் கிடக்கும்.

233 நீரோடி நிலங்குளிர்ந்து, கப்பு விட்டுக் கவர் விட்டுக் காக்கை நிற்க நிழலில்லை.

234 நெஞ்சிலே ஒரு கல், வீட்டிலே ஒரு கல்,

235 நேராக நடக்கத் தெரியாது. நெற்றியும் கண்ணும் தெரியாது,

236 நொறுக்கப்பட்டு மூன்று பேர் நுரைக்கிணற்றில் கிடக்கிறார்கள்.

237 நோயுமில்லை நொடியுமில்லை தொட்டவுடன் பட்டுக் கிடக்கிறாள், பவி மகள்.

238 பகலெல்லாம் படுத்துக் கிடக்கிறான். இரவெல்லாம் சுரங்கம் போடுகிறான்.

239 பகலெல்லாம் வெறுங்காடு. இரவானதும் பூங்காடு.

240 பச்சைக் கதவு. வெள்ளை ஜன்னல். உள்ளே உறங்கு கிறான். கறுப்புத்துரை.

241 பச்சைச் செடி மேலே மெச்சும் தயிர்ச் சாதம்.

242 பச்சை பங்களா மெத்தை. படுத்திருக்கிறார் கறுப்புத் துரை

243 பச்சைக்கிளி, பறக்க மாட்டாக்கிளி, கொம்பிலிருக்கும் கூமட்டக்கிளி

244 பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு, நாலு நிறமுவ மாறிப் பழுக்கும் பழம் என்ன?

245 படர்ந்த விரல் எட்டு. எட்டு மேலும் பட்டு:

246 பட்டணத்து மொட்டை மரம், வெட்ட வெட்டத் தழையுது.

247 பட்டணம் கிட்ட இருந்தும் எட்டிப் பார்க்க இயல வில்லை.

248 பட்டுக் கயிறு' பளபளப்புக் கயிறு எண்ணெய் படாக் கயிறு என்ன. கயிறு.

249 பட்டை உண்டு சட்டையில்லை. இலையுண்டுகிளையில்லை கன்று உண்டு மடியில்லை.

250 பல பேருக்கு ஒரு குடுமி.

251 பள்ளத்தைக் கண்டால் பாயும். மேட்டைக் கண்டால் பிரளும்.

252 பள்ளம் பள்ளமாய் ஓடும் குள்ளக்கிடாரிக்கு; முது கிலே மூன்று சூடு.

253 பாம்புக்குப் பகையாளிக்குப் பாடத் தெரியாது. ஆடத் தெரியும்.

254 பாயும் தண்ணீர் இல்லாமல் பயிர் ப்ச்சை பாக்கு வெற்றிலை போடாமல் வாய் சிவப்பு.

255 பார்க்கப் பச்சை, பழுத்தால் சிவப்பு, பல்லிலே பட்டால் கண்ணிலே கண்ணீர்.

256 பிறக்கும் போது சுருண்டிருக்கும். பிறந்த பிறகு விரிந்து நிற்கும்.

257 பிறந்த நாள் தொட்டு இயங்கும் இயந்திரம்; ஒரு நிமிஷம் நின்றால் மறு நிமிஷம் மரணம்.

258 பின்னாலும் முன்னாலும் உன்னை அறியாமல் ஒருவன் வருகிறான்.

259 பீடம் மேலே கூடம், கூடத்துக்கு உள்ளே குரங்குக் குட்டிகள்.

260 புதைத்து வைத்த பொருள் பொத்துக் கொண்டு மேலே எழும்புது.

261 புற்றைச் சுற்றிப் பூரான்.

262 பூ ஆகாப் பூ என்ன பூ?

263 பெட்டியைத் திறக்கக் கெட்டிக்காரப் போலீஸ்காரன் எட்டிப் பார்த்தான்.

264 போகையிலே கிழவி: வருகையில் குமரி: வந்த வகை என்ன?

265 போட்டதெல்லாம் ஏற்றுக் கொள்வான் பொட்டி மகன் பொழுது விடியக் கொட்டிடுவான் பொட்டி மகன்.

266 போவான் வருவான் பொட்டி மகன். ஒரு காலில் நிற்பான் செட்டி மகன்.

## ம--மொ

267 மஞ்சள் குருவி நெஞ்சைப் பிளந்து மகா தேவனுக்கு பூஜையாகிறது.

268 மண்ணுக்குக் கீழே மத்தளம்.

269 மண்ணுக்குள் இருக்கும் மயிராண்டி, கண்ட பக்கம் வளை தோண்டி.

270 மண்ணுக்குள்ளே இருக்குது மயிர் கோதி.

271 மாங்காய் வடு வடிவம் மங்கா ஒளிமணி உள்ளது அங்கத்தில் உண்டு அதன் பேர் சொல்.

272 மார்பு அளவு வளர்ந்த புல்லை, மாடு வந்து மேயுது.

273 மானிடர் போடாத பந்தலில் மாலையில் மலரும் பூ எது?

274 மிதித்தால் ஓட்டம் எடுக்கும் முள்ளுப்பட்டால் நின்று விடும்.

275 முட்டை அளவில் கனி இருக்கும், முழுதும் மஞ்சள் நிறமாக மாறும், முக்கியம் எவர்க்கும் நலன் அளிக்கும்.

276 முட்டை போல குருவிக்கு ஒரு முழ வால்.

277 மூதுகிலே மூட்டை தூக்கி மூன்று மணிக்கு முழம் போவான்.

278 முதுகு எல்லாம் கூனல். வயிறு எல்லாம் பல்,

279 முயல் நுழையாத காடு என்ன காடு?

280 முதுகு மேல் இருப்பது கூடு. அது முத்தம்மாளுக்கு வீடு.

281 முள்ளுக்கம்பி, முளையாக் கம்பி; நுழையாக் காட்டில் நுழைந்த கம்பி.

282 முள்ளுக்குள் கிடக்குது கூட்டம். மெள்ளச் சத்தம் கேட்டாலும் ஓட்டம்.

283 மூடியைத் திறந்தேன். முருகனைக் கண்டேன்.

284 மேலே பறந்தாலும் கருடனல்ல; வால் நீளமிருந்தாலும் குரங்கும் அல்ல:

285 மேலேயும் கல்லுப்படி கீழேயும் கல்லுப்படி, நடுவே கிடக்குது நாக சர்ப்பம்.

286 மொட்டைத் தட்டிலே எட்டுப் பேர் பயணம்.

287 மொட்டை மாடு உட்கார்ந்திருக்கிறது. மூக்சணாங் கயிறு ஓடிக்கிடக்கிறது.

## ய-யா

288 யாரும் இல்லாத காட்டில் கருந்தும்பிகரணம் போடுது

289 யானை படுக்க இடமுண்டு, கடுகு மடிக்க இலை இல்லை,

290 யாரும் விரும்பாத மணம். என்ன? மணம்.

291 யானை வெந்து போச்சு யானைக்கால் வேகவே யில்லை.

## வ-வை

292 வட்டப் பாறை வெட்ட முடியலை.

293 வட்ட வட்டச் சிமிழ் இட்டது எல்லாம் குட்டிப்புழு

994 வட்டத்தகடு, வாய்க்கு ருசி தரும் தகடு, வட்டத்தட்டில் சுட்டு, எடுத்த தகடு.

295 வந்தது எல்லாம் வாங்கத் தெரியும். வாங்கினதை வழங்கத் தெரியாது.

296 வருட முழுவதும் கனி தரும் மரம் எது?

297 வழி நடக்கத் தெரியாதவன். வந்தார் போனாருக்கு வழி காட்டுகிறான்.

298 வாங்க முடியாத சுமை என்ன? சொல்லிவிடு பார்ப்போம்.

299 வாயிலே வாங்கி வாயிலே கக்கும் வலிய பொருள் எது?

300 வானத்துக்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி.

301 விடிய விடியப் பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந் தோட்டம்.

302 விட்டம் போட்டுக் கட்டியும் விசிறிமாட்ட இடமில்லை

303 விரித்த தலை முடிக்கத் தெரியாத வெள்ளாட்டிக்கு விதத்தாலே ஒரு பெயர்.

304 வீட்டிலிருக்கிற கூட்டுக் கள்ளன் விடிய விடிய கொள்ளை அடிக்கிறான்.

305 விரிந்து பரந்த ஏரியில் வெள்ளி ஓடம் ஓடுது,

306 வெட்கம் கெட்ட புளியமரம்; வெட்ட வெட்டத் தழையுது,

307 வெயிலுக்கும் மழைக்கும் கையில் நானிருந்தால் கலக்கமேன்.

308 வெளியிலே பச்சை. உள்ளே சிவப்பு வெட்டிப்பார், கழியுது நீர், விழுது பார், கறுப்பு மணி.

309 வெள்ளி ரூபாய் துள்ளி விழுகிறது.

310 வெட்டும் அரைக்கும் கிட்டியதெல்லாம்.

311 வெள்ளைப் பிள்ளையார் கோவிலுக்குப் பூட்டுமில்லை திறப்புமில்லை.

312 வெள்ளையாய் இருப்பான். கறுப்பாய் மாறுவான் தன்னை அறியாமல் தண்ணீராய் மாறுவான்.

313 வெள்ளையும் கறுப்பும் விரவியது ஓர் விதை வெகு வாய்த் தட்டார் விரும்பிடும் சிறுவிதை.

314 வேடிக்கை வேஷக்காரன் ஓடித் தாவக் கெட்டிக் காரன்.

315 வேளைக்கு வேளை வேண்டியதைத் தின்பான் நாளைக் குக் காலையில் கொல்லையில் கொட்டுவான்"

316 வடிவமும் வர்ணமுமில்லை மெல்ல. வீசினால் நல்லது செய்யும் வேகமாய்த் தாக்கினால் வேரைப் பறிக்கும்.

317 வைத்ததெல்லாம் சுமக்கும் வழி ஓரத்தில் நிற்கும் வையகம் வானகம் எங்கும் நிறைந்தது.

# விடுகதை விடைகள்

1 வெஙகாயம்
2 தேங்காய்
3 வாழைமரம்
4 வாழைப்பூ
5 வெங்காயம்
6 ஈசல்
7 மாட்டுக் கொம்பு
8 கைவிரல்கள் பெருவிரல்
9 எறும்பு
10 கர்ற்முடி
11 பலாப்பழம்
12 நட்சத்திரம்; வானம்
13 மயில்
14 மிளகாய்
15 பசு
16 வெங்காயம்
17 தண்ணீர்
18 வெல்லம் தின்னஎறும்புகள் வருதல்
19 தேன் அடை
20 வாழை இலை
21 உப்பு
22 முயல்
23 பஞ்சு நூற்றல்
24 செம்மறியாடு
25 இயந்திரக் கல்
26 புடலங்காய்
27 தண்ணீர்
28 எருக்கு இலை
29 தயிர்க்கோல்
30 விரல்கள்
31 கூரை வீடு கட்டுதல்
32 உழவு சால்
33 ஈ
34 பனம் பழம்
35 தீபம்
36 கண்
37 யானை
38 மூக்கு
39 கடிகாரம்
40 நட்சத்திரம்
41 நாசித்துவாரம்
42 குதிர்
43 தலை முடி
44 அடுப்பு
45 பருப்பு மத்து
46 அரிசிச் சோறு
47 கருவாடு
48 பற்கள்-நாக்கு
49 தீக்குச்சி
50 தரையான்
51 பலாப்பழம்
52 பாம்பு
53 எச்சில்

54 நாய்
55 தலைமயிர்
56 கோழி முட்டை
57 வானம்
58 குடை
59 நிழல்
60 இளநீர்
61 இளநீர்
62 அரைக் கீரை
63 உப்புக் கல்
64 வானம்
65 மனித மூளை
66 எலி
67 தேன் அடை
68 கயிற்றுக் கட்டில்
69 சூரியன்
70 பேன்
71 கிணறு
72 நண்டு
73 பேன்
74 மூட்டைப் பூச்சி
75 கண் மணி
76 மனித உடல்
77 ரயில் சத்தம்
78 கேழ்வரகுக் கதிர்
79 கமலை வடம்
80 விளக்கில் எண்ணெய் குறைதல்
81 உள்ளங்கை
82 சுண்டு விரல்
83 அவரவர் நிழல்
84 சேம்பு இலை
85 நாக்கு
86 முட்டை
87 வயிறு
88 கடலைத் தோடு
89 வெளிச்சம் (விளக்கு)
90 பம்பரம்
91 குடை
92 வாழைத் தார்
93 தேங்காய்
94 புகையிலை
95 கோழி முடி
96 கத்தாழை
97 புளியம் பழம்
98 செருப்பு
99 கதவு
100 விளாம் பழம்
101 செக்கு
102 பதனீர்
103 உமி
104 நெருஞ்சி முள்
105 புகை
106 ரயில் வண்டி
107 ஆலமரம்
108 நண்டு
109 சோப்பு முட்டை
110 பாவக்காய்
111 அக்கினித் தழல்
112 எள் எண்ணெய்

113 மாதப் பிறப்பு
114 செருப்பு
115 சட்டை
116 கொட்டாப்புளி
117 யானைத் தந்தம்
118 கரடி
119 பூட்டு
120 தலைப்பேன்
121 செருப்பு
122 எறும்பு வரிசை
123 குன்றுமணி
224 பாம்பு
125 சுரைக் காய்
126 முருங்கை
127 இலவங் காய்
128 கொடிக் கள்ளி
129 பாம்பு
130 வானம்
131 மீன்
132 சேவல்
133 குடை
134 குன்றுமணி
135 கொக்கு
136 சோப்பு முட்டை
137 முட்டைக்கரு
138 பூசணிப் பழம்
139 தயிர் கடையும் போது வெண்ணெய் மிதத்தல்
140 கண்மயிர்
141 பல்
142 பூசணிக்காய்
143 பேன்
144 முருங்கைக் காய்
145 இளநீர்
146 தீபம் அணைதல்
147 நாக்கு
148 திராட்சப்பழம்
149 சோழப் பொரி
150 அகப்பை
151 இளநீர்
152 கம்பு, கோழிக் குஞ்சு
153 தானியப் படி
154 கடிகாரம்
155 திரி
156 வெள்ளரிக் காய்
157 பாவற்காய்
158 முயல்
159 குடம்
160 நட்சத்திரம்
161 கரும்பு
162 ஈசல்
163 குயவன்
164 கண்மணி
165 சுரைக் குடுகு
166 வாழைப் பழம் உரித்து வாயில் போடுதல்
167 நாக்கு
168 பாம்பு
169 முந்திரிக் கொட்டை

170 அடுப்பு
171 முட்டை
172 காக்கு
173 உளுந்து
174 எள்ளுக்காய்
175 எலிப் பொறி
176 ஆறு
177 கண் மூடி
178 பல்
179 இளநீர்
180 கண் கருவிழி
181 பச்சை குத்துதல்
182 விளக்கு வெளிச்சம்
183 கடிகாரம்
184 பேனு
185 வடை
186 தலைமுடி
187 குழந்தை
188 வண்டிச் சக்கரம்
189 புளியம் பழம்
190 தேள் கொட்டுதல்
191 கண்
192 தேங்காய்
193 மொச்சைப் பயறு
194 மாதுளம் பழம்
195 காது
196 சேப்பங் கிழங்கு
197 பன்றி
198 கண்மூடி
199 பனங்கிழங்கு, மூக்குபொடி
200 கோலம்
201 எரு முட்டை
202 செம்பு இல்லை
203 தலைமயிர், பேன்
204 நெருப்பு
205 விளக்குத் தண்டு, அகல் திரி, தீக்கொளுந்து
206 நாக்கு
207 கப்பல்
208 தவளை
209 மான் கொம்பு
210 வைக்கோல், அரிசி
211 முத்துச்சிப்பி, முத்து
212 எலுமிச்சம் பழம்
213 மின்மினிப் பூச்சி
214 நெருப்பு
215 பீர்க்கன் காய்
216 தேன் எடுத்தல்
217 ஆறு, கடல்
218 பதனீர்
219 தொட்டில்
220 பூசணிப் பழம்
221 தொட்டாச் சிணுங்கிச் செடி
222 துடைப்பப் புல்
223 உதடுகள்
224 மல்லிகைப்பூ, ரோஜாப்பூ முதலியன
225 பாம்பு சட்டை கழிதல்
226 நெருப்பு
227 நாற்காலி
228 அம்மி குழவி
229

230 கயிற்றுக் கட்டில்
231 பசுமடி, கொம்பு
232 பாய்
233 நெற்கதிர்
234 விக்கல், உப்புக்கல்,
235 நண்டு
236 சுண்ணாம்புவெற்றிலை பாக்கு
237 தொட்டாச் சிணிங்கி
238 எலி
239 நட்சத்திரம்
240 சித்தாப் பழம்
241 மல்லிகைப் பூ
242 பப்பாளிப் பழம்
243 கொளுமிச்சம் பழம்
244 ஈச்சம் பழம்
245 குடை
246 தலைமயிர்
247 முதுகு
248 பாம்பு
249 வாழை
250 வெங்காயம்
251 தண்ணீர்
252 அணில்
253 மயில்
254 கிளி
255 மிளகாய்
256 வாழை இலை
257 இருதயம்
258 நிழல்
259 பள்ளிக்கூடம் குறும்புப் பிள்ளைகள்
260 விதை முளைத்தல்
261 அரை ஞாண்
262 உப்பு
263 வேர்க் கடலை
264 தோல், தண்ணீர் சால்
265 வயிறு
266 கதவு
267 வாழைப் பழம்
268 சேப்பங்கிழங்கு
269 எலி
270 பனங் கிழங்கு
271 கண்
272 பேன்
273 நட்சத்திரம்
774 மிதிவண்டி (சைக்கிள்)
275 எலுமிச்சம் பழம்
276 பருப்பு மத்து
277 நத்தை
278 கருக்கரிவாள்
279 முக்காடு
280 நத்தைக் கூடு
281 ஊசி
282 மான், முயல்
283 வேர்க் கடலை
284 காற்றாடி
285 பற்கள், நாக்கு
286 தோணி படகு
287 பூசணிக்காய் கொடி
288 பனம் பழம் விழுதல்
289 சவுக்கு மரம்
290 அம்மணம்
291 கூரை வீடு தீப்பிடித்து எரிதல்
292 நிழல்
293 சேமியா
294 அப்பளம்
295 கடல்
296 வாழை
297 கைகாட்டி மரம்
298 கர்ப்பம்
299 சீசாப் புட்டி

300 மழை
301 நட்சத்திரம்
302 மூக்கு
303 பனை மரம்
304 எலி
305 நிலவு
306 தலைமுடி
307 குடை
308 தர்ப்பூசணி
309 சோறு பொங்கி விழுதல்
310 பற்கள்
311 முட்டை
312 மேகம்
313 குன்றுமணி
314 குரங்கு
315 வயிறு
316 சுமைதாங்கிக் கல்
317 காற்று


கவனியுங்கள் ! கட்டாயம் வாங்குங்கள் !!

# புதுமைப் புதிர்கள்

(சீக்கிரம் வெளிவருகிறது)

பக்கம் சுமார் 100 விலை 75 ந. பை.

திரட்டியவர் பண்டிதர் K. J. வேதமுத்து

பல மாதங்களாகச் சிரமப்பட்டுச் சிறுகச் சிறுக சேர்த்துத் திரட்டிய 725 புதிர்கள்.

சிறியோர் பெரியோர் சிரித்துச் சிரித்து இன்பப் பொழுது போக்கவும், சிந்தனைத் திறன் அதிகரிக்கவும் சீரிய முறையில் செய்த நூல்.

தமிழ் நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய இன்பக் களஞ்சியம்.

விற்பனை விவரம்

இவ்வாண்டு முடிவுக்குள் 65 ந. பை, தபால் தலை அல்லது மணியாடர் செய்யவும். வெளியானதும் தபால் செலவின்றி அனுப்பப்படும். 5 பிரதிகளுக்கு முன் பணம் அனுப்பினால் 6 பிரதிகள் அனுப்பப்படும்.

வியாபாரிகளுக்கு 20 கமிஷன் தரப்படும்.
விலாசம் : பண்டிதர் K. J. வேதமுத்து,
8-வது குறுக்குத் தெரு, 206, T. P. சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10


வள்ளுவர் அச்சகம், சென்னை-12

# CHILDREN'S DELIGHT

# சிறுவர் அறிவுக் கதிர்

## (புதுப்பித்தல் விளக்கம்: RENEWAL)

தமிழ் நாட்டின் தனிப்பெரும் அன்பர்களே !

உங்கள் யாவருக்கும் என் அன்பின் வணக்கத்தை முதன் முதலில் கூறிக்கொள்ளுகிறேன். பத்திரிகை நடத்துவது என்பது பெரும் பாறைக் கல்லைத் தலை மேல் தூக்கி வைத்து நடப்பதை ஒக்கும். பத்திரிகை நடத்திப் பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்தலாம் என்பது பகற் கனவு: ஆயினும் என் மாணவர் பலர் நன்கொடை திரட்டித் தருவதாகவும், என் நண்பர்கள் பலர் தலைமை ஆசிரியர்களாக இருப்பதனால் தம் செல்வாக்கைச் செலுத்தி என்னைக் கைத் தூக்கி விடுவதாக வாக்களித்திருமையாலும், இதனைப் புதுப்பிக்க முற்பட்டுள்ளேன்.

அதோடு ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் தமிழ் மொழியை மேல் நாட்டாருக்கும், 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மொழியை ஆசிரியப் பணிக்குக் கற்கும் மாணவர்களுக்கும், உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கும், அநேகம் தமிழ் நூல்களைத் தமிழில் எழுதியும் அடைந்த அனுபவத்தில் கண்ட நுணுக்கங்களை என் அந்திய காலத்தில் பலருக்குப் பத்திரிகை மூலம் காட்ட வேண்டும் என்ற பேரவாவினாலும் இப்பத்திரிகையைப் புதுப்பித்து நடத்தப் போகிறேன்.

## (நன்கொடை FREE—WILL GIFT)

இதற்கு உங்கள் நன்கொடையும் உங்கள் மூலம் உங்கள் நண்பர்களின் நன்கொடையும் தேவை. சுமார் ரூ. 5,000, பெற உங்கள் கையை எதிர் பார்க்கின்றனன்,

## (சந்தா விவரம் SUBSCRIPTION)

ஆண்டு சந்தா : ரூ. 3-50. ஆயுள் சந்தா : ரூ. 100. தனிப் பிரதி 30 பை. உங்கள் ஊர் ஏஜண்டுகளிடமும் புஸ்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

உங்களின் உதவியை நாடி நிற்கும் அன்பன்

K. J. வேதமுத்து

---

இன்பப் பொழுது போக்கிற்கு இன்றியமையாதது.
இதுவரை எவரும் வெளியிடாதது.

புதுமைப் புதிர்கள் BRAINTEASERS

விலை ரூ. 1-40

# 2753 TAMIL IDIOMS

## தமிழ் அவியலும் அதிரசமும்

இச்சிறு நூல் ஒவ்வொரு உயர் நிலை, நடு நிலைப்பள்ளி மாணவர் மாணவிகள் கையிலும், தமிழ்மொழியைச் செவ்வனே கற்றுத் தேறுவதற்கு மிகமிக அவசியம் இருக்க வேண்டிய நூலாகும். இதன் கண் (1) மரபுத் தொடர்கள் (2) இணைமொழிகள் (3) ர, ற ; ந, ன, ண ; ல, ள, ழ பேதச் சொற்கள் (4) தொகைச் சொற்கள் (5) அடுக்குச் சொற்கள் (6) எதிர்ச் சொற்கள் முதலியனவும், பிறவும் அடங்கியுள்ளன.

விலை. 55 பை.

## பாடசாலைத் தினசரி தெய்வப் பொது வணக்கப் பாடல்கள்

"ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கூடங்களில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் பொதுவான ஒரு கடவுளைத் தேதி வாரியாக 31 நாட்களும் எல்லாருக்கும் தெரிந்த எளிய இராகத்தில் பாடக்கூடிய விதமாக இயற்றப் பெற்றது (1) தமிழ் நாட்டு அரசாங்கக் கவி இராமலிங்கம் பிள்ளை (2) கவியோகி சுத்தானந்த பாரதியார் : பிஷப்மார்களின் போற்றுரை கொண்டது. (விலை 50 பை)

## அருமைத் தோழன்

தமிழ்ப் பாடநூல் அரசாங்கம் 5-ம் வகுப்பு நூலை ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் தெள்ளத் தெளிய விளங்கிக் கொள்ள இயற்றிய துணை உரை நூல். இதனுள் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் தமிழறிவுக்குத் தேவையான யாவும் இடம் பெற்றிருக்கிறது. (விலை 60 பை)

## அதிரசம்

இது அரசாங்க 5-ம் வகுப்புத் தமிழ்ப் பாட நூல் முழுவதற்கும் ஆறு கேள்வித் தாள்கள். இங்கு தந்துள்ள நூல்களின் அதன் தன் விலையை முன்பணமாக தபால் தலையாகவோ, மணியாடர் மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். 20% கழிவு உண்டு. (விலை 15 பை)

எம் முகவரி : இந்நூலின் முன்னால் காணவும்.